# கலைச்செல்வி



விலை: 25 ச

# பீடி உலகிலேயே ஒரு புரட்சி

## என்ன?

# யானை பீடி ஸ்பெஷல்

நீங்கள் சோம்பலின்றித் துரிதமுடன் செயலாற்ற
எந்நேரமும் புகைக்க உகந்தது.

பீடி உலகில் தனக்கென ஒரு தனியிடத்தை வகுத்துக் கொண்டதும் இலங்கையில் வெற்றிக் கொடி நாட்டி வருவதும்

## யானை பீடி ஸ்பெஷல்




தொலைபேசி: 7651

தயாரிப்பாளர்கள்:

# யானை பீடி கம்பெனி

**62, மெசஞ்சர் வீதி : கொழும்பு**

# YOUR HAND REVEALS ALL

## கைரேகை நிபுணர் - புரபசர் விந்தா
## லேக்வியூ ஹோட்டல், 1-ம் இலக்க அறை
## 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மனக்கவலையா? குடும்பக்கஷ்டமா? கவலை வேண்டாம். இதோ புரபசர் விந்தா அவர்கள் இருக்கிறார். அவரைக் கண்டு ரூபா இரண்டு கட்டணத்துடன் கைபார்த்து 5 கேள்விகளுக்குப் பதில்பெற்றுச் செல்லுங்கள். அத்துடன் அவரிடம் எல்லாவிதக் கஷ்டங்களையும் பறக்கடிக்கக்கூடிய, இந்தியாவில் காசிதேசத்தில் பிராமணர்கள், சந்நியாசிகள் (யோகிகள்) யாபேரும் கூடி எட்டுக்கிரக சேர்க்கையின்போது விசேஷமாய் தயார்செய்யப்பட்ட வீரபத்திரக் கடவுளின் கவசம் உண்டு. அவை, ஒருவருட உத்தரவாதமுள்ளது ரூபா 3-50; இரண்டு வருட உத்தரவாதமுள்ள கிரகணத்தின்போது தயார்செய்யப்பட்டது ரூ.7-50; 3½ வருட உத்தரவாதமுள்ள எட்டுக்கிரக சேர்க்கையின் போது தயாரிக்கப்பட்டது ரூ. 17-50.

இக்கவசங்கள் வெற்றி, கவசம், காதல், பிரசவம் ஆகியவற்றிற்கு உறுதுணையும் கல்விகற்க முடியாத மாணவர்கட்கும், கீழ்ப்படிவில்லாத பிள்ளைகட்கும் உதவியும், சாரதிகள், பிரயாணிகட்கும், பலவீனமாயிருப்பவர்கட்கும் பாதுகாப்பும், மற்றும் தீராத வியாதிகளினால் பீடிக்கப்பட்டுக் கஷ்டமடைவோர்க்கு நோய் தீர உத்தரவாதமும் அளிக்கும்.

செவ்வாய் தோஷத்திற்கு அகப்பட்ட ஆண், பெண்களுக்கு திருமண விஷயங்கள் பேசி தடைப்படும். இன்னும் பல விஷயங்கள் கைக்கெட்டியது வாய்க்கெட்டாதது போல் ஆகும். இவைகளிலிருந்து விடுதலை பெறவும், வேலைதேடி அலைபவர்கட்கு இலகுவில் வேலை கிடைக்கவும் ரூ. 17-50 இயந்திரம் பாவித்தால் 90 நாட்களில் பலன் கிடைக்கும். இவ்வாறு பலன் பெற்றோர் அனேகம் பேருளர். நீங்களும் ஏன் பரீட்சிக்கக் கூடாது?

[WANTED: Canvassers of both sexes. Travelling allowance plus 100/- will be paid. Experienced and matured persons Preferrable. Contact Prof. VINDHA]




தயாரிப்பாளர்கள்:-
**RVG பீடிக் கம்பெனி,**
34, மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம்.

**நினைவு மலர்கள் வெளியிடுவோரே!**
**பாடசாலை அதிபர்களே!**
**புத்தக ஆசிரியர்களே!**
**பத்திரிகை நிர்வாகிகளே!**

குறைந்த செலவில்
**சிறந்த 'புளக்'குகள்**
செய்ய வேண்டுமானால்
எங்களுக்கு எழுதுங்கள்

**Sri Lanka Block Makers**
131, MESSENGER STREET ; COLOMBO



தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்.

—பாரதியார்.

கலை: 7 | ஆவணி 1965 | காட்சி 7-8

AUGUST 1965

**கதைகள்:**

- இதயத்தின் பார்வை.
- உறவின் நிழல்.
- இன்பம்.

**கவிதை**

- அறிவு.
- மரணமே.

**கட்டுரை:**

- பறக்காத பறவைகள்.

**பிற:**

- தேசியத் திருத்தலம்.
- பத்தாம் பக்கம்.
- பலதும் பத்தும்
- அன்புள்ள ஆசிரியருக்கு.
- பட் பட்.
- சினிமா.

பொ. சண்முகநாதன் எழுதிய

## "கொழும்புப் பெண்"

- நீங்கள் சிரித்துச் சிரித்துப் படிக்கவும் படித்துப்படித்துச் சிரிக்கவும் ஏற்ற சிறந்த நூல்!
- ஈழத்திலிருந்து தோன்றும் முதல் நகைச்சுவைக் கட்டுரைகளின் தொகுதி!

**விலை ஒன்றரை ரூபாய்தான்!**

விபரங்களுக்கு:

**கலைச்செல்வி**

புகையிரதநிலைய வீதி : சுன்னாகம்.


விலையுயர்ந்த மூலப்பொருட்களைக்கொண்டு
சுகாதாரமுறைப்படி சுத்தமாக
நவீன இயந்திரங்களினால் தயாரிக்கும்
BABY BRAND
பேபி மார்க் ஸ்பெஷல்
பானங்களையே அருந்துங்கள்
எல்லா இடங்களிலும் கிடைக்கும்
தயாரிப்பாளர்கள்
சுப்பிரமணியம் சோடாக் கம்பெனி
வல்வெட்டித்துறை
போன்: 97.
தந்தி: SODA
கிளை: ருஜூஸ்ரோர்ஸ்
2/B ஸ்ரான்லி ரேட்
யாழ்ப்பாணம்
போன்: 313.
தந்தி: ESVES.

# தேசீயத் திருத்தலம்.

ஈழநாட்டிலே தேசீயத் திருத்தலம் ஒன்றுண்டு. இந்துக்களும் பௌத்தர்களும் இஸ்லாமியர்களும் இதயங்கலந்து சென்று இறைவனை வழிபடும் திருப்பதி அது.

வேண்டியவர், வேண்டாதார் என்ற வேறுபாட்டை மறந்து, சொந்தம் பந்தம் என்ற தொடர்புகளைத் துறந்து எல்லாரும் ஓரினம் எல்லாரும் ஓர் குலம் என்ற உன்னத உணர்வுடன் நல்லார்க்கும் அல்லார்க்கும் எல்லாரும் உதவுகின்ற உயர்ந்த மன நிலையை உண்டாக்கி உருவாக்கும் இடம் அது.

அந்தத் திருத்தலத்திலே, கதிர்காமம் என்னும் கருணையம் பதியிலே கலியுக வரதனின் திருவிழா நடைபெறுகின்றது. அருகே அமைந்துள்ள மசூதியிலே அல்லாவின் தூதருக்கு அருள் விழா நடைபெறுகின்றது.

அவனருளாலே அவன் தாள் வணங்க, சிந்தை மகிழ்ந்து சிறப்பான வாழ்வு பெற, ஆயிரமாயிரம் பக்தர்கள் அங்கே செல்கின்றார்கள்.

பல மொழிகளைப் பேசுவோர் ஒரே வழியிலே செல்கின்றார்கள்; மதத்தால் மாறுபட்டோர் மனத்தால் ஒன்றுபட்டுச் செல்கின்றார்கள்.

தென்கோடியிலே, தேசமே திரண்டிருப்பதைக் கண்டு அந்தத் தெய்வமே மகிழ்ந்தருளும்!

முருகா, முருகா என்று அருள் மழையில் நனைவார்கள் இந்துக்கள்.

சாது, சாது என்று சாந்தி தேடுவார்கள் பௌத்தர்கள்.

அல்லா, அல்லா என்று வல்லானை வழுத்துவார்கள் இஸ்லாமியர்கள்.

நாம் தமிழரோ, சிங்களவரோ, முஸ்லிங்களோ அல்லர். நாம் அனைவரும் கடவுளின் குழந்தைகள். நாம் மட்டும் சிறப்பாக வாழ்ந்து பயனில்லை. அயலவனும் அடுத்தவனும் அக நிறைவுடன் வாழ வேண்டும். அப்போதுதான் நாமும் சிறப்போடு வாழலாம்—என்பன போன்ற உன்னத உணர்வுகள் கதிர்காமத்திற்கு மட்டும் ஏகபோக உரிமையாக இருக்கக்கூடாது; ஒரு சில நாட்களுக்கு மட்டும் தோன்றி மறைபவையாக இருக்கக் கூடாது.

கதிரைமலையின் கருணையொளி அகில இலங்கையையும் ஆட்கொள்ள வேண்டும். அந்த அருள் ஒளியில் திளைப்பதற்கு நம்மை நாமே அருகதையுடையோராக ஆக்கிக்கொள்வோம்.

# அன்பார்ந்த நேயர்களே!

வணக்கம். "பழைய நிர்வாகத்தில் "கலைச்செல்வி" உரிய காலத்தில் ஒழுங்காக வரவில்லையாயினும், இலக்கியத் தரம் நிறைந்ததாக வெளிவந்தது. புதிய நிர்வாகம் ஒழுங்காகப் பத்திரிகையை வெளியிடுகின்றது. ஆனல், இலக்கியத் தரத்தைக் கோட்டைவிட்டுவிட்டது" எனச் சில இலக்கிய அன்பர்கள் எழுதியிருக்கின்றனர்கள். தமது கருத்தை வெளிப்படையாகக் கூறிய அன்பர்களுக்கு நன்றி கூறுகின்ேறம். ஆனல் நாம் வெளியிட்ட இதழ்களை ஒன்றுசேர்த்துப் பார்க்கும்போது, கூடியவரை இலக்கியத் தரத்தைப் பாதுகாக்கப் பாடுபட்டோம் என்ற திருப்தியே ஏற்படுகின்றது. எனினும் அன்பர்களின் கருத்தையும் நாம் புறக்கணிக்காது, மென்மேலும் சிறந்த படைப்புகளை அளிக்க முயல்கின்ேறம்.

தரமான கதை, கட்டுரைகளை அனுப்பி வைக்கும்படி பழம் பெரும் எழுத்தாளர்களுக்கு எழுதியுள்ளோம். ஒரு சிலர் தம் படைப்புகளை அனுப்பியிருக்கின்றனர். வேறு சிலர், விரைவிலே அனுப்பி வைப்பதாக உறுதியளித்துள்ளனர். அடுத்த இதழிலிருந்து அவர்களுடைய படைப்புகள் வெளியாகும்.

தொடர்கதை பற்றிய அறிவித்தல் இந்த இதழில் வெளியாகின்றது. மற்றைய விபரங்களை அடுத்த இதழிலே தெரிவிப்போம்.

கலைச்செல்விக்குக் கதை கட்டுரைகள் அனுப்புவோர், அவற்றுடனேயே போதிய தபால் தலைகளை வைத்து அனுப்பினல்தான், பிரசுரிப்பதற்குத் தெரிவுசெய்யப்படாவிடில், அவற்றைத் திருப்பியனுப்ப முடியும். நமது முடிவை அறிவித்தபின், சிலர் தபாற்தலைகளை அனுப்புகின்றனர். அவர்களுக்கு எவ்வித பதிலையும் எழுத முடியாத நிலையில் நாமுள்ளோம். தரமான விஷயங்களை மட்டும் அனுப்பினல் இத்தகைய பிரச்னைகள் எழமாட்டாவே!

ஒரு பத்திரிகை ஒழுங்காக வெளியாவதற்கு, விளம்பரதாரர்களின் ஆதரவு மிகவும் அவசியம். விளம்பரதாரர்களின் தாராளசிந்தையினலேதான் "கலைச்செல்வி இப்போது ஒழுங்காக வெளியாகின்றுள். ஆகவே இந்த விளம்பரதாரர்களை நீங்கள் நிச்சயமாக ஆதரிக்க வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கின்ேறம்.

—ஆசிரியர்.

மாணவர்களே!

1965 ஆனி தொடக்கம் 1965 மார்கழி வரையுள்ள "கலைச்செல்வி" இதழ்களைப் பாதுகாப்பாக வைத்திருங்கள். மாணவர் பரிசுத் திட்டத்தில் பரிசு பெற வாய்ப்பு ஏற்படும்.

# அறிவு

-கல்வயல் வே. குமாரசாமி-

உளத்துள், மனித
இனத்துள், உறைந்து பயிராகி
வளத்துட் சிறந்த
மனத்தில் நிறைந்து கதிராகிக்
களிப்புட் கலந்து
அறிவோர் உழைப்பாற் கனிவாகி
ஒளியுட் பதிந்த
தெளிவுப் பழிங்கே அறிவாகும்.

நிறைக்கும், உயர்ந்த
நிலைக்கும் அமைந்து கலங்காமல்
இறைக்கும் இணங்கும்
அருள் போல்; எவர்க்கும் அரிதாகி
மறைக்கும் அடங்கி;
ஒளிசேர் மணியாய் அணியாய
பொறைக்கும் இடமாம்
வளஞ்சேர் விளக்கே அறிவாகும்.

புயலுள் நெருப்புள்
அடங்கிப்; பொசுங்கிப் புதையாமல்
அயலார் அடுத்த
செறுவார் அழிக்கா அரணாகி
பயனால் உயர்ந்து
உலகத் துயர்ந்தோர் உறவாகி
நயனால் மனதைத்
திறக்கும் திறப்பே அறிவாகும்.

இது அவசர யுகம். எதையும் ரத்தினச் சுருக்கமாகச் சொல்ல வேண்டும். ரத்தினச் சுருக்கமாகச் சொன்னல் போதாது. சொல்வது தெளிவாக விளங்கவும் வேண்டும். எனவே ஒரு விஷயத்தை ரத்தினச் சுருக்கமாகவும் அதே நேரத்தில் விளக்கமாகவும் கூறுவது எப்படி என்பதை ஆராய்வதே இங்கு நமது வேலே. உதாரணமாக "கந்தசாமிக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது" என்பதை எடுத்துக்கொள்ளலாம். கந்தசாமிக்குப் பைத்தியம பிடித்தது பொய்யல்ல என்பதிலும் பார்க்க, கந்தசாமிக்குப் பைத்தியம் பிடிக்கவில்லே என்பது உண்மையல்ல என்பதிலும் பார்க்க, கந்தசாமிக்குப் பிடித்தது பைத்தியமல்ல என்று சொல்வது குழப்பமற்ற முறை என்று சொன்னல் அதை நீங்கள் பிழையில்லே என்று சொல்லாமல் விட்டுவிடுவீர்கள் என்று கருதப்படுவதாலும் கந்தசாமிக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்பதைத் தெளிவாகச் சுருக்கமாகக் கூறவேண்டியது நமது தலேயாய கடமையாக இருப்பதாலும் கந்தசாமிக்கும் பைத்தியத்திற்கும் என்ன சம்பந்தம் என்று விழல் ஆராய்ச்சி நடாத்தி நேரத்தை வீணடிக்காமல் விஷயத்திற்கு வரலாமென்றுல், "கந்தசாமிக்குப் பிடித்தது பைத்தியம்" என்பதா "கந்தசாமிக்குப் பைத்தியம் பிடித்தது" என்பதா பிழையற்றது என்ற கேள்வி எழுகின்றபடியால் "கந்தசாமிக்குப் பிடித்தது பைத்தியம்" என்பது சரியென்று வைத்துக்கொண்டு யோசித்துப் பார்த்தால் மனதில் சாதாரணமாகத் தோன்றக்கூடிய "கந்தசாமிக்குப் பிடித்த மற்றவை என்ன?" என்ற கேள்விக்கு "கந்தசாமி சிறுவனுய் இருந்தால் இனிப்புள்ள பண்டம் பிடிக்கும்; வளர்ந்தவனுக இருந்தால் காரம் பிடிக்கும்" என்ற பதில் தயாராக இருந்தபோதிலும் நமது லட்சியம் (லட்சியம் என்று சிலரும் இலட்சியம் என்று சிலரும் எழுதிவந்தாலும் இரண்டிற்கும் பொருள் ஒன்றே. ஆனல் இந்த லட்சியத்திற்கும் இலட்சியத்திற்கும் மற்றொரு சொல்லான அலட்சியத்திற்கும் பொருள் வேறுபாடு இருப்பதை நேயர்கள் கவனிக்குக) இனி விட்ட இடத்திற்கு வந்தால் – நமது லட்சியம் சுருங்கக் கூறி விளங்கவைத்தலேயாதலால் பல கோணங்களில் இருந்தும் பல கேள்விகளேப் பாயவிட்டு நம்து விஷயத்தைப் பிய்த்து எடுத்து அலசி ஆராய்ந்து ஐயந்திரிபற ஒரு முடிவு கட்டவேண்டிய நிலேயில் நாமிருப்பதால் கந்தசாமி – பைத்தியம் – பிடித்தது என்ற மூன்று வார்த்தைகளேயும் மாறிமாறிப் போட்டுப் பார்த்து (1) கந்தசாமிக்குப் பைத்தியம பிடித்தது. (2) பைத்தியத்திற்குக் கந்தசாமியைப் பிடித்தது (3) பிடித்தது கந்தசாமி பைத்தியத்தை (4) பிடித்தது பைத்தியம் கந்தசாமியை – இப்படியாக இன்னும நூற்றுக்கணக்கான வழிமுறைகளே ஆராய்ந்து நாம் முடிவாகக் கூறுவது என்னவென்றுல் கந்தசாமிக்குப் பைத்தியம் பிடிக்கவில்லே என்பதாகும். அப்படியாஞல் பைத்தியம் பிடித்தது யாருக்கு என்ற கேள்வி எழும் அதைப் பிறிதொரு சமயம் சுருக்கமாகவும் தெளிவாகவும் ஆராய்வோம்.

O

# இசையின் ரசிகர்கள்

சுத்தமான கர்நாடக இசையை உண்மையாகவே ரசிக்கக்கூடிய இசைப் பிரியர்கள் யாழ்ப்பாணத்தில் எத்தனை பேர் இருக்கின்றனர்? என யாராவது கேட்டால், ஆகக் குறைந்தது 151 பேர் இருக்கின்றார்கள் எனத் துணிந்து சொல்லலாம் இந்தக் கணக்கு எப்படி வந்தது தெரியுமா?

ரசிகர்களுக்காக, ரசிகர்களாலேயே சமீபத்தில் இரண்டு சங்கீத சபைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சங்கீத வித்வான்கள் இச் சபைகளில் உறுப்பினராக முடியாது; ரசிகர்கள் மட்டுமே உறுப்பினராகலாம். தலை சிறந்த வித்வான்களை அழைத்து உயர்ந்த கச்சேரி செய்வித்து அவர்களுக்குச் சன்மானஞ் செய்து, அவர்களை ஊக்குவிப்பதும், உறுப்பினர்களின் ரசிகத்தன்மையை வளரச்செய்வதுமே இச்சபைகளின் நோக்கம்.

"செல்லம்ஸ்" மூர்த்தி, கண்ணன் கோஷ்டியைச் சேர்ந்த ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி, ஆகியோரின் முயற்சியின் விளைவு யாழ் ரசிக சபா. இப்போது யாழ் மோஹன கான சபா எனப் பெயர் மாற்றம் பெற்றுள்ளது. உதவி அரசாங்க அதிபர் திரு ஏ. பெருமையினார் சபையை ஆரம்பித்து வைத்தார். ஸ்ரீ ஐயாக்கண்ணு தேசிகர், ஸ்ரீமதி சரஸ்வதி பாக்கியராசா, ஸ்ரீ மூர்த்திஐயர் ஆகியோரின் அருமையான கச்சேரிகள் இச்சபையின் ஆதரவில் நடந்துள்ளன. "உண்மையான ரசிகர்களின் முன்னிலையில் மெய்மறந்து கச்சேரி செய்வதில், ஆத்மீக திருப்தி ஏற்படுகின்றது" என்பது இவர்கள் ஒவ்வொருவரும் வெளியிட்ட அபிப்பிராயம்.

சங்கீதபூஷணம் ப. முத்துக்குமாரசாமி அவர்களின் அரும் பெரும் முயற்சியினால் சுளிபுரம்-பருளாயில் ஷண்முகானந்த கான சபா ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீமதி சத்தியபாமா இராஜலிங்கம் ஆரம்பக் கச்சேரியை நிகழ்த்தினார். "ஈழநாடு" ஹரன் சபையைத் தொடக்கி வைத்தார்.

முன்னதில் 91 பேரும் பின்னதில் 60 பேரும் இதுவரை உறுப்பினராகச் சேர்ந்துள்ளனர்.

உலகிலேயே, இசைக்கருவி ஒன்றின் பெயருடன் இணைந்துள்ள நாடு யாழ்ப்பாணம்தான்! அத்தகைய சிறப்பு வாய்ந்த யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தச் சபாக்கள் மென்மேலும் வளர்ந்து, இசைவெள்ளத்தைப் பாயச் செய்து, இறைனின் அருட்கடலுக்கு ரசிகர்களை இட்டுச் செல்லும் என நம்புகின்றோம்.


## ஆசிரியர்களே!

உங்கள் வசதி கருதி ஆரம்பிக்கப்பட்டுள்ள

**G.A.Q; G.S.Q**

வகுப்புகளில் சேர்ந்து படியுங்கள்

இடம்: யாழ் சிங்கள மகாவித்தியாலயம்

நேரம்: சனி, ஞாயிறு, மற்றும் விடுமுறை நாட்கள்: காலை 9 தொடக்கம் மாலை 4 மணி வரை

பாடங்கள்: தமிழ், புவியியல், பொருளியல், வரலாறு கணிதம் முதலியவை

தமிழில் கற்பிக்கப்படும்.

விபரங்களுக்கு;

சி. எஸ். இராசரத்தினம்

ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி. புத்தூர்.




இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைத்தது 1947ம் ஆண்டு ஆகஸ்டு 15ல் என்பதும், அந்தச் சுதந்திரத்தை ஈட்டிக்கொடுத்தவர் மகாத்மா காந்தியடிகள் என்பதும் அனைவரும் அறிந்ததே! சுதந்திரம் கிடைப்பதற்கே காரணமாக இருந்த காந்தியடிகள் அந்தச் சுதந்திர விழாவைப் பகிஷ்கரித்தார் என்பது உங்களுக்குத் தெரியுமா? சுதந்திர தின வைபவங்களில் கலந்துகொள்ளும்படி டில்லியிலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பைக் காந்தியடிகள் நிராகரித்தார். மக்களுக்குச் சுதந்திர தினச் செய்தி விடுக்கவும் மறுத்தார். இந்தியாவை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்ற ஜின்னாவின் கோரிக்கைக்கு இந்திய தேசிய காங்கிரஸ் இணங்கியது அடிகளாருக்குப் பிடிக்கவில்லை. ஆகவேதான் டில்லியிலிருந்து வெகு தூரத்திலுள்ள கல்கத்தாவிற்குச் சென்று சுதந்திர தினத்தன்று உபவாசமிருந்து இறைவனை வழிபட்டுக்கொண்டிருந்தார். "என் உள்ளம் என்றுமில்லாதபடி கலங்கிக் குழம்பிப்போய்க் கிடக்கிறது" என்று ராஜகுமாரி அமிர்த கௌரிக்கு அடிகளார் எழுதினார்.

⁂ ⁂ ⁂

இந்தியாவின் சுதந்திரப் பிரகடனத்தைப் பிரிட்டிஷ் அரசாங்கம் 1947ல் வெளியிட்டது. ஆனால் அதற்குப் பல மாதங்களுக்கு முன்னமேயே இந்தியாவின் சுதந்திரப் பிரகடனத்தை அகில உலகிற்கும் வெளியிட்டுவிட்டார் ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ். "சுதந்திரம் நமது பிறப்புரிமை. அதை நமக்குத் தருவதற்குப் பிரிட்டிஷார் யார்? நம்மை நாமே சுதந்திர புருஷர்கள் ஆக்கிக்கொள்வோம்" என்ற கொள்கையுடைய போஸ் தம் சுதந்திரப் பிரகடனத்தின் மூலம் வெள்ளையரை இந்தியாவிலிருந்து வெளியேறும்படி கட்டளையிட்டார். கிழக்காசியாவிலுள்ள இந்திய தேசியப் படைவீரர்களின் முன்னால் போஸ் அவர்களாலேயே வாசிக்கப்பட்ட இப் பிரகடனம் இந்தி, ஆங்கிலம், தமிழ் ஆகிய மூன்று மொழிகளிலும் எழுதப்பட்டிருந்தது!

⁂ ⁂ ⁂

நீச்சலடிப்பதைக் கற்றுக்கொண்ட பிறகுதான் நீரிலிறங்க வேண்டும் என்பதைப் போன்றது தான் சுதந்திரம் பெறத் தகுதி பெற்ற பிறகுதான் சுதந்திரம் பெற வேண்டும் என்ற பேச்சு.

—மக்காலே.

⁂ ⁂ ⁂

ஈழத்து இலக்கிய உலகு துயில்கிறது, துவண்டுவிட்டது என்றெல்லாம் நம் "பிரம்மா"க்கள் கூறுவதைப் பொய்யாக்கிக்கொண்டு, நூல்கள் அச்சாகின்றன. சென்ற மாதம் திருக்கோணமலை எழுத்தாளர்கள் "நீரில் பூத்த மலர்" தொகுப்பை வெளியிட்டனர். "நகுலன்" தன் 'கன்னிப் பெண்'ணையும் டொமினிக் ஜீவா "சாலையின் திருப்ப"த்தையும் வெளியிட்டார்கள். இம்மாதம 'நாவேந்தன்' தன் "தெய்வ மக"னை அ

முகஞ் செய்யவிருக்கின்றார். பொ. சண்முகநாதனின் ''கொழும்புப் பெண்'' என்ற நகைச்சுவைத் தொகுதியும் மலையமான், கே. வி. நடராசன் ஆகியோரின் சிறுகதைத் தொகுதிகளும் விரைவில் வெளிவரவிருக்கின்றன. இவற்றிற்கு முன்பே சென்னை - பாரி நிலைய வெளியீடாக வந்த ''சிற்பி''யின் 'நிலவும் நினைவும்' கூட இருக்கின்றது. இனி ஈழத்து 'இலக்கிய வாய்'களுக்கு ஓய்விருக்காது!

⁂ ⁂ ⁂

அந்த ஊரில் அடிக்கடி பூகம்பம் ஏற்படும். தம் பத்து வயது மகனுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டுவிடுமோ என்று பயந்த பெற்றோர் அவனைப் பக்கத்து ஊரிலுள்ள உறவினர் வீட்டுக்கு அனுப்பிவைத்தனர். ஒரு வாரத்தில் பையன் திரும்பி வந்துவிட்டான். அவனுடன் வந்த கடிதம் ஒன்றில் இப்படி எழுதியிருந்தது: ''பையனை உங்களிடமே அனுப்பிவிட்டேன். தயவுசெய்து பூகம்பத்தை வேண்டுமானால் இங்கே அனுப்பிவிடவும்.''

⁂ ⁂ ⁂

பெர்னாட் ஷா தாம் எழுதும் எல்லா விஷயங்களையும் முதலில் மிகவும் கவனமாகத் திருத்துவார். பின் அவைகளில் அனாவசியமானவற்றை வெட்டிச் சுருக்குவார். அளவுக்கதிகமாக ஒரு சொல்கூட இருக்கக் கூடாது என்பது அவர் கருத்து. ஒரு சமயம் ஒரு நாடக மன்றத்துக்கு அவர் கடிதம் எழுதினார். அது மிகவும் நீண்டுவிட்டது போல் தோன்றியது. அந்தக் கடிதத்தின் பின்குறிப்பில் ஷா கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார் ''இந்தக் கடிதம் அளவுக்கு அதிகமாய் நீண்டுவிட்டதற்காக மன்னிக்கவும். என்ன செய்வது? குறுகிய கடிதம் எழுத எனக்கு நேரமில்லை!''

ஒரு படத்தை ஆகக் கூடி எத்தனை தடவை பார்க்கலாம்? தமிழ்ப் படமென்றால், இரண்டு அல்லது மூன்றுதடவைதான் பார்க்கலாம். முதல் தடவை பார்க்கும்போதே அதைத் தொடர்ந்து பார்க்கச் சகியாமல் இடையிலே எழுந்து வருபவர்களுமுண்டு. சிவாஜி. எம். ஜி. ஆர். தாசர்கள் தத்தம் 'ஹீரோ'க்களின் படங்களைப் பத்து, இருபது தடவையும் பார்ப்பார்கள். ஆனால் பல ஆண்டுகளுக்கு முன் தயாரான ''சந்திரலேகா'' படத்தை ஒருவர் 96 தடவை பார்த்தார் என்றால் அது ஆச்சரியத்திலும் ஆச்சரியமல்லவா? என்றாலும் இது உண்மைதான். சென்னையிலே சமீபத்தில் நடைபெற்ற ஒரு விழாவில் ஜெமினி வாசன் இத்தகவலை வெளியிட்டார்!

⁂ ⁂ ⁂

சென்னைச் சட்ட சபையில் எம். எல். ஏ. ஒருவர் பேசிக்கொண்டிருந்தார். அவருடைய பேச்சில் ள, ழ, ஆகிய அத்தனைக்கும் 'ல' ஒன்றே பயன்பட்டது. இதனைச் சகிக்கமுடியாத தி.மு.க. எம்.எல்.ஏ. ஒருவர் ஓர் ஒழுங்குப் பிரச்னையை எழுப்பினார்.

தி. மு. க: சபையில் கொலைபாதகங்களைத் தூண்டத்தக்க பேச்சுக்களைப் பேசலாமா?

சபாநாயகர்: கூடாது! அப்படி யாரும் பேசவில்லையே!

தி.மு.க: இதோ பேசிக்கொண்டிருக்கும் மதிப்புக்குரிய உறுப்பினர், ''பார்த்துக் கொல்வார்கள்'', ''கேட்டுக் கொல்வார்கள்'', 'விசாரித்துக் கொல்வார்கள்'' என்கிறாரே, இது பலாத்காரத்தைத் தூண்டாதா?

அமெரிக்காவில் 2026க்கு மதிகமான பத்திரிகைகளிருக்கின்றன. 10 கோடிக்குமதிகமானோர் தினசரிப் பத்திரிகைகள் படிக்கும் பழக்கமுள்ளவர்கள். ஆனாலும் இது மொத்த ஜனத்தொகையில் 2/3 பகுதிதான்.

# நீரில் பூத்த மலர்



தமிழறிஞர் கனகசுந்தரம்பிள்ளை வாழ்ந்து தமிழ்ப்பணி புரிந்த திருக்கோணமலையில் வாழும் எழுத்தாளர்களை இன்றைய பத்திரிகையாளர்களும் விமர்சகர்களும் புறக்கணித்தாலும், அவர்கள் சோர்வடையாது தம்மாலியன்ற தமிழ்ப்பணி செய்தே வருகின்றார்கள். துடிப்புமிக்க இளைஞர்களைக் கொண்டுள்ள மறுமலர்ச்சித் தமிழ் மன்றத்தினர் அங்கே நல்லமுறையில் இலக்கியப்பணி ஆற்றி வருகின்றனர். அம் மன்றத்தின் முயற்சியால் ''நீரில் பூத்தமலர்'' என்ற கதை-கவிதைத் தொகுப்பு உருவாகியது இத் தொகுப்பின் வெளியீட்டு விழா, தமிழறிஞர்கள், அரசியல் தலைவர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், ரசிகர்கள், முன்னிலையில் திருமலை இந்துக் கல்லூரி மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. கழகப் புலவர் திரு. பெ, பொ. சிவசேகரன் அவர்களிடமிருந்து டாக்டர் சித்திரவேலு அவர்கள் முதற் பிரதியை வாங்கி விற்பனையை ஆரம்பித்துவைத்தார்.

# கன்னிப் பெண்

''கன்னிப்பெண்''ணைக் கன்னிகாதானம் செய்து கொடுக்கும் புனிதமான பணியைப் பெருமகிழ்வுடன் நான் செய்ய முன்வந்துள்ளேன். தமிழர்களிடையே பல வீரர்களையும், தன்மானம் மிக்கவர்களையும் தமிழறிஞர்களையும் இக் ''கன்னிப்பெண்'' தோற்றுவிப்பாள் என நம்புகின்றேன்'' என வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம், ''நகுலன்'' எழுதிய ''கன்னிப்பெண்'' என்று சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டு வைத்து உரையாற்றும்போது குறிப்பிட்டார். ''நகுலன்'' எழுத்துத் துறையில் இறங்கியுள்ள புதிய எழுத்தாளர், அவரிடம் எழுதும் திறமை நிறைய இருக்கிறதென்பதைக் ''கன்னிப்பெண்'' நிரூபிக்கின்றாளே தவிர, அவருடைய சிறந்த சிறுகதைகளை உள்ளடக்கியிருக்கின்றாள் எனக் கூறமுடியாது இருந்தும் இத்தகைய மிகச் சிறந்த ஒரு வெளியீட்டுவிழா, ஈழத்தில், வேறெங்காயினும் நடந்திருக்குமா என்பது சந்தேகத்திற்குரியது. ஆசி

ரியர் கலாசாலை அதிபர் விஸ்வலிங்கம், செந்தமிழ்ச் செல்வர் சின்னத் தம்பி, தேவன், நாவேந்தன், சிற்பி, பண்டிதை பாக்கியம், முதலியோர் நகுலனை மனமுவந்து வாழ்த்த, திரண்டிருந்த மக்கள் 25/- ரூபா, 50/- ரூபா எனப் பணத்தைக் கொடுத்து நூலை வாங்கிச் செல்ல— தமிழுக்கு நல்லயோகம் பிறந்துவிட்டது என்ற இனிய நினைவே என்னுள்ளத்தில் ஏற்பட்டது. ஒரு புதிய எழுத்தாளனுக்கு வட்டுக்கோட்டையிலுள்ள தமிழ் அன்பர்கள் அளித்த ஆதரவையும் கௌரவத்தையும் நினைத்து, இந்நாட்டுத் தமிழ் எழுத்தாளர்கள் அனைவரும் நிச்சயம் பெருமைப்படலாம்.

# புதிய வைத்தியசாலை



நாகரீகம் வளர வளர, நோய்களின் வகைளும் பெருகுகின்றன. இப்போது எந்த ஆஸ்பத்திரிக்குப் போனாலும் அங்கே "கியூ" வரிசையில் நோயாளிகள் நிற்பதைக் காணலாம் கால் கடுக்க நின்று, கடைசியில் உள்ளே போனால், டாக்டர்களின் கடுகடுத்த முகத்தையும் கடுஞ் சொற்களையுந்தான் பார்க்கவும் கேட்கவும் முடிகின்றது. குட்டித் தெய்வங்களாகிய ஆஸ்பத்திரிச் சிப்பந்திகளின் கவனக் குறைவால் எத்தனை நோயாளிகள் இவ்வுலகைவிட்டே பிரிகின்றனர்! இந்த இழி நிலைக்குத் தன்னலானவகையில் —ஒரு சிறிய அளவிலாவது—ஒரு பரிகாரம் காணவேண்டும் என நினைத்தார் ஆயுர்வேத டாக்டர் ஆ. நடராசா அவர்கள். நேரடிக் கண்காணிப்பில் நோயாளிகளை வைத்திருந்து, நோய்களை அறவே போக்கவேண்டும் என்ற நோக்குடன், ஒரு வைத்தியசாலையைச் சுன்னாகத்தில் அமைத்துள்ளார். நோயாளிகள் தங்குவதற்கேற்ற சகல வசதிகளையுமுடைய இவ் வைத்தியசாலையை உடுவில் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம் அவர்கள் சென்ற ஆனி 2ல் திறந்துவைத்தார். பாராளுமன்றப் பிரதிநிதி, டாக்டர் ஆகியோரை மேலேயுள்ள படத்திலும், வைத்தியசாலையின் அழகான தோற்றத்தைக் கீழேயுள்ள படத்திலும் காணலாம்.

—அன்பன்

# ம ர ண மே!

-யூ. எல், தாவூத்-

பற்றெனு மொன்றும், வற்ருப்
பாசமென் றென்று மின்றி
உற்றவர், உறவோர், செல்வம்
உடையவர், ஏழை, மூத்தோர்,
கற்றவர் என்று பேத[illegible]
காட்டிடா த[illegible]ரையும்
பற்றுட னணைத்து; துயய
பகவனி னிருப்பைச் சொல்வாய்!

அறிவியல் துணையாக் கொண்டு
அணுவையே பிளந்தார்; மேலாம்
பொறியியல் வளர்த்து மிக்கப்
புதுமைகள் கண்டார்; மண்ணில்
வருமிக கங்குல் மாய்த்து
வளனுறு ஒளியைச் செய்தார்
மரணமே! உன்னை வெல்ல
வழியினைக் கண்டா ரில்லை!

புவியுடை மாந்தர் வாழ்வில்
பூண்டிடும் துயராற் காணும்
தவிப்பினை மாற்றி; மோனம்
தரித்திடச் செயும் மரிப்பே
நவின்றிடும் போதம் ஆயா (து)
நஞ்சினை நெஞ்சி லேற்றி
நவையுறு குணங்கள் பூண்டு
நாளுமே நலிந்தா ரந்தோ!

---

# சிந்திக்க மறந்தாயா?

ராகம்: ரஞ்சனி                தாளம்: ஆதி.

பல்லவி

சிந்திக்க மறந்தாயா கந்தன் மலர்ப்பாதம்
வந்த வினைகளெல்லாம் விந்தையாய் மறைந்தோடும்

அனுபல்லவி (சிந்திக்க)

தேன்மலர்ப் பொழில் சூழும் திருநல்லை நகர் வாழும்
வான் கருணை பொழியும் வள்ளி மணாளனை

சரணம் (சிந்திக்க)

திருமுருகா என்னுமுன் வருமுருகன் தன்னை
ஒருமுறை நீ நினைத்தால் பெருகிடுமேயருள்
திருநீற்றுலபிஷேகம் ஒருநூறு நாமார்ச்சனை
தெருளாரவர் தொண்டு தருமே பேரின்பம்.

(சிந்திக்க)

சங்கீதபூஷணம்-ப. முத்துக்குமாரசாமி.

# ஒருபக்தின் பார்வை!

மு. கனகராசன்

குற்றவாளிகள், சுற்றவாளிகள் சாட்சிகள், சல்லிக்காசுக்கும் வேலை யற்றவர்கள், பார்வையாளர்கள் இப் படியே சலசலப்பு மிகுந்துவருகிறது அங்கே. அன்று ஒரு கொலை வழக் கும் விசாரிக்கப்படவிருந்ததால் ஏகப் பட்ட சனக்கூட்டம். சுன்னைகச் சந் தை மல்லாகத்துக்குப் பெயர்நது வந்துவிட்டதோ என்று எண்ணும் படி சந்தடி கூடுகிறது. இதன் மத்தியில் வெற்றிலை, பாக்கு, சோடா, கடலை என்று வியாபார மும்முரம் ஒருபுறம். அதோ அங்கே கடலைக் காரக் கிழவிகள் அவர்களிடையே சின்னச்சிக்கிழவியை என் கண்கள் துளாவுகின்றன.

''என்னணை நீ உதைச் சொல்லு ருய். போன பங்குனியிலைதான் ஊாங் கேசந்துறையிலை ஒரு பொடிச்சி யைத் துண்டு வெட்டாய் வெட்டிப் போட்டுட்டான். பெட்டையெண்டால் ஏன் சொல்லுருய் போ, சுண்டினல் ரத்தம் வரும். வடிவான பெட்டை.... பேந்து வழக்கு என்னைச்சு எண்டி ருய்...'' தலையை நிமிர்த்தி சுற்றிவர 'ஒரு நோட்டம்' விடுகிருள். சின் ஞச்சிக்கிழவி, பிறகு "......இதே கோட்டிலைதான் வழக்கு வீசுப்பட் டுப்போச்சுது. பேந்தென்ன பேச... நீதியைப்பத்தி உதுகளுக்கென்ன தெரியும்?... சட்டம் தெரியுமே, அப் படியெண்டாப் பேசு..."

சின்னச்சிக்கிழவிக்கு வியாபாரம் தொடங்கிவிட்டது. இப்படித்தான் அவள். அங்கு நடந்த வெகு சுவா ரஸ்யமான வழக்குகளையெல்லாம் சொல்லிச் சொல்லியே கதைகளால் 'கண்ணி'வைத்துஒவ்வொருவரிடமும் இருபத்தைந்து, முப்பது சதத்துக்கு வியாபாரம் செய்துவிடுவாள். கோட் டடியில் வியாபாரம் செய்வதனலோ என்னவோ சின்னச்சியிடம் நிறைய வாக்குச் சாதுர்யம் இருந்தது. அவ ளுடைய பேச்சில் கட்டுண்டு சில ''பிரக்கிராசி''கள் கூட ஒரு முறை வாங்கிய கச்சான் முடிந்ததும் தெரி யாமல் மீண்டும் வாங்கிக் கொறித் துக் கொண்டே கதைகளில் மெய் மறந்திருக்கின்றனர் என்ருல் அவ ளின் சிறப்புக்கு வேறு 'அளப்பு' வேண்டுமா?

ஆனல் இன்று...என்ன நேர்ந் தது? அதோ வழக்கு மன்றத்தின் சுவரோரத்தில் குந்தியிருந்து தன் சாதுர்யத்தையெல்லாம் இழந்துவிட் டாற்போன்றதொருமனத்தாங்கலில்,

உக்கிரமாகிக்கொண்டிருக்கும் சூரிய வெளிச்சத்தில், சட்டத்தின் பிடியில் சிக்காத உண்மையைப்போல புழுக்களாய் நெளிந்தோடும்,சிவப்பு, நீலம், கறுப்புஎன்ற வண்ண பேதங்களையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் அந்த உருவம்...அதுவா சின்னச்சி?

அந்தப் பெரிய கடகம், அதில் முக்கால் பாகம் நிறைந்த சிந்தாமணிக் கடலை; அதன்மேலிருக்கும் கச்சான் கடகம். அதனுள், ஒழுங்கற்று அடுக்கப்பட்ட தமிழக சஞ்சிகைத் தாள்களிலான உறைகள். இவற்றை உறுத்திக் கொண்டிருக்கும், சிறிதே செயற்கையாய் உட்குழிந்த குழாயில் பாவிக்கும் பழைய புகையிலைப் பேணி. அதற்குள் சுருண்டு கிடக்கும் தாவடிப் புகையிலைத் துண்டு. இந்த உள்நாட்டுக் காட்சிகளை மறைத்துக்கொண்டு மேலே விரிந்து கிடக்கும் கொஞ்சம் பளபளப்பான, எவரோ சும்மா தந்த "ஈழநாடு" எல்லாம் எங்கே? காவியேறிய விரல்களுக்கிடையே சிரஞ்சீவியான, தானே சுற்றிய எச்சில் ஊறிய அந்தச் சுருட்டுத்தான் எங்கே?

சின்னச்சி எழும்புகிருள்.சட்டம் எங்கே, எப்படிப் போகிறது. செயல்படுகிறது என்பதையெல்லாம் எவரும் பர்க்கக்கூடாது என்று பறைசாற்றுமாப்போல் தலைமுதல் கால்வரை ஒரே கறுப்புடை போர்த்த "பிரக்கிராசி" ஒருவர் கறுத்தக்கார் ஒன்றிலிருந்து இறங்கி வருகிருர், அவள் அவரிடம் ஓடுகிருள்.

"ஐயா! நீங்கதான் அந்தச் சந்நதியானைப்போலை எங்களை காப்பாத்தவேணும். ஐயா! என்மேன் உதைச்செய்திரான் ஐயா. அப்புவைப்போலை பொன்னையா ஊர்வம்புக்குப்போகாதவன்...எவனோ குறுக்காலைபோவான் செஞ்சதற்கு......"

"நீ பயப்படாதை சின்னச்சி நான் காப்பாத்திறன்!"- நல்லூர்க் கந்தனே தரிசனம் தந்தாற்போன்ற பேரமைதி அவளுக்கு.ஆனல் கோயிலிலிருக்குமட்டுமதானே அமைதி ஆறுதல் எல்லாம்? கடவுளேயானலும் அர்ச்சனை, காணிக்கை என்று கொடுத்தால்தானே அவை கூட கிடைக்கின்றன. அந்தப்பிரக்கிராசி எவ்வளவோ நல்லவர். என்றாலும் கூட எதுவும எதிர்பார்க்காமலா பேசுவார்? எனவே சின்னச்சி இரண்டு கடலை தின்று தண்ணீர் டித்துச் சேர்த்த இருபது பவுனையும் அவருக்காக, இல்லையில்லை,தன் மகனின் உயிருக்காகத் தாரை வார்க்கக் காத்திருக்கிருள். அதைத் தன் மடியில் பொத்தி வைத்திருப்பது கூட அவளின் வலது கரத்துக்கு மாத்திரமே தெரியும்.

உள்ளே எட்டிப் பார்க்கிருள் சின்னச்சி. எங்கே அந்த முகம்? குற்றவாளிகளின் அறைக்குள்ளே பொன்னையா? அவன் இரும்புக் கம்பிகளுக்கிடையே நிற்கும் காட்சியொன்று தெரிகிறது. அந்தக்காட்சி, பொன்னையா தவழும் பாலகை பனைமட்டைப் படலைக்குள்ளிருந்து வெளியே வரத்துடித்ததை—அதைக் கண்ட தனது இன்பப் பூரிப்பை நினைவுபடுத்துகிறது அவளுக்கு. கணப்போது ... பொன்னையா பற்றியிருக்கும் கம்பி புழுக்கொடியலாய் மாறுகிறது. அப்போதே அவனுக்கு தந்தை இல்லை. தாய்தான் தன் மைந்தனின் பிஞ்சுக் கரங்களுக்கு

பனங்கிழங்குகளை ஒடித்துக் கொடுக்க வேண்டியிருந்தது. சின்னாச்சியின் கண்கள் சொரிகின்றன. 'இரும்புக் கம்பிகளை ஒடிக்கும் சக்தி எனக் கில்லையே' என்று ஏக்கத்துடன் நினைக்கிறாள். ஆக்ரோசம், வெறி, வெறுப்பு அனைத்தும் ஒரு நீண்ட பெருமூச்சாய் வெளியேறுகின்றன தன் மடியைத் தடவிப் பார்த்துக் கொள்ளுகிறாள். கண்களில் ஒருகீற்று நம்பிக்கை மின்னல் பளிச்சிடுகிறது' 'என் பணம் அதைச் செய்துவிடும். —இரும்பென்ன இந்த உலகமே அதன்முன் எந்த மூலைக்கு?

'வாயைக்கட்டி, வயிற்றைக்கட்டி ஏன் இந்தப் பணத்தைச் சேர்த் தேன். என் மகனை—என் ஒரே குலப் பெருமையை இரும்புக் கூண்டுக்குள் வனவிலங்கைப் போல் வைத்துப் பார்க்கவா?' நினைவுகள் கண்ணீராய் ஓடுகின்றன. திடீரெனப் பார்வை யில் ஆனந்தத் தாண்டவம். நிச்சய மாக சின்னாச்சிக்குச் சித்தப்பிரமை யில்லை! படலையின் தடிகளுக்கிடை யில் பொன்னையா இருந்த காட்சி மாறி, இரும்புக் கம்பிகளுக்கிடையே அவனிருக்கும் காட்சி மாறி, பூக்கள் தோன்றுகின்றன. ஆமாம் இரும்புக் கம்பிகள் அழகழகானபூச்சரங்களாய் மாறுகின்றன. அவற்றிற்கிடையே அவை இழை இழையாய் அவனைச் சுற்றித் தொங்க மணவறையில் அவன் பூரித்திருக்கும் இன்பக்காட்சி. 'இதற்காகவல்லவா நான் காத்திருந் தேன்! இதற்காகத்தான் வாழ்ந்திருந்தேன்'. எண்ணெய் கண்ட காய்ந்த விளக்கைப்போல சின்னாச்சியின் முகத்தில் சுடர்.— ஆமாம் மகனின் திருமணத்திற்காகச் சேர்த்தபணம் அது. மகனது வாழ் வின் ஆரம்பத்தை அந்தப்பணத்தில் கண்டாள் அந்தஅன்னை. இன்றும்... அவனது வாழ்வின் ஆரம்பம் அதே பணத்திலல்லவா தங்கியிருக்கின் றது!

இன்று விளக்கம் இருக்கும் என்று பிரக்கிராசி சொல்லியிருந் தார். நேரம் நெருங்க சின்னாச்சி யின் இதயம் தாச்சியின் கடலை யாய்த் துடிக்கத் தொடங்கியது. 'ஐயோ மகனே எப்படித்தான் இது நடந்ததோ?'

"நான் சந்தைக்குப் போய்விட் டேன். இருபது ருத்தல் கடலை வேண்டிவந்து வைத்துவிட்டுத் தன்னுடைய இரண்டு மறிக்குட்டிக ளுக்கும் கதியால் முறித்து அவற் றைக் கத்தியால் — என்னவோ போராமேஅதற்கு..."பீறிஸ்'சாச்சாய் ...'கிறிஸ்'—ஓம்! ஓம்! 'கிறிஸ்'தான் என்ன கோதாரியோ?...... உதாலை வெட்டிப் போட்டுக்கொண்டிருந்தவ னும். படலை திறந்தே கிடந்திருக் கிறது. வெயிலாயிருக்கிறதே குட்டி களுக்குத் தாகமாயிருக்கும் என்று தண்ணீர் வாளியைக் கொண்டுவர உள்ளே போனவன் வெளியேவந்த நேரம் மார்க்கண்டுவின் கிடாய் கதியாலைத் தின்றுகொண்டிருந்த தாம். குட்டிகளை நெருங்கவிடாமல் வேறு தன் கொம்பாலை முட்டியிருக் கிறது. "டாய்!...யாரடா உங்காலை? ஆடு வளக்கிற நீங்கள் கட்டிப் போட்டு வளங்கோவன்டா" என் றானாம். மார்க்கண்டு வீட்டிலிருந் திருக்கிறான். பங்குனிமாதத்து மப்பு. 'கொட்டி'லாலை வந்த நோம். "யார டா உவன் நாட்டாமை" என்றவன் "என்ற கிடாயைப்பத்தி கதைக்க வும் துணிச்சலே..." என்றபடியே

எங்கள் படலைக்குள் நுழைந்துவிட்டானும். இளரத்தமெல்லே? பொன்னையாவும் "வேசையனைப்போலத் திரிஞ்சால் ஏன் கதைக்காயினம்?" என்றிருக்கிறுன் ஆட்டைக்கொண்டு போக வந்திருக்கிறுள் மார்க்கண்டுவின் 'மனுஷி' முச்சந்தியில் மணல் வறுப்பவள் அவள். "எங்களை வேசையளெண்டு நீ சொல்லவோ?" எண்டு அவள் ஒரு பக்கத்தாலை மல்லுக்கு நிக்க சண்டை பெரிசாய்ப் போச்சுது. மார்க்கண்டு தாறுமாருப் பேசினவனும். என் பேரை வேறு இழுத்திருக்கிறுன். பேந்தென்ன? சண்டை அடிதடியில் வந்திட்டது. மார்க்கண்டு தன் கைத்தடியாலை மேனுக்கு அடித்திருக்கிறுன அப்ப தானும் பொன்னையா—இந்தத் தரித்திரம் பிடிப்பான்—கதியால் வெட்டிக்கொண்டிருந்த கத்தியாலை குத்தினவன். என் மேனைப் போலீசிலை அடைச்சிட்டினம். அடுத்த நாள் மார்க்கண்டு மண்டையைப போட்டிட்டான்.'

சின்னுச்சியின் உடம்பெல்லாம் என்னவோ செய்தது. இதையெல்லாம் சொன்ன அயல்வீட்டுச் சனங்களில் ஒருவர்கூட தன் மகனுக்காகச் சாட்சி சொல்ல வரவில்லை என்ற எண்ணம் வேறு நம்பிக்கை இழக்கச் செய்தது.

"நாகலிங்கம் பொன்னையா!" "நாகலிங்கம் பொன்னையா!" "நாகலிங்கம் பொன்னையா!" எருமைக் கடாவின் பிளிறலா அது? அப்படியானுல் அதன் முதுகில்...? சின்னுச்சி தன் தலைக்குமேல் கைகூப்பி உலகத்துத் தெய்வங்களையெல்லாம் பூஜித்துக்கொள்கிறுள்.

வழக்கு ஆரம்பமாகிவிட்டது. சம்பிரதாயமான கேள்விகள் கேட்கப்பட்டுவிட்டன. தொடர்ந்து திருமதி. மார்க்கண்டுவின் வக்கீல் பொன்னையாவை ஆட்டிவைத்துக் கொண்டிருந்தார். பிரபஞ்சத்தின் முதலாவது கொலைகாரன்கூட இப்படிப் பொன்னையாவைப் போல மருண்டுஅருண்டுஇருந்திருப்பானே என்ற இரகசியம் வழக்கு மன்றத்தில் பரவியது.—நீதிபதி குறுக்கிட்டார்.

"தினமும் ஆடுகளுக்குக் கதியால் கொடுப்பாயா?"

"ஆம் ஐயா!"

"வழக்கமாகக் கொத்தாகக் கட்டித் தூக்கிவிடுவாய்?..."

"இல்லை ஐயா! தனித்தனியாக ஒவ்வொன்ருகத்தான் முறித்துக் கொடுப்பேன் ஐயா!"

"வழக்கமாக கையால் முறித்துக் கொடுப்பாய்...?"

"ஆம ஐயா!"

"சமபவம் நடந்த அன்று மாத்திரம் ஏன் கத்தியால் வெட்டிக் கொடுத்தாய்?"

'புதிதாய் வாங்கி வந்திருந்தேன்...அதஞல் அதாலை வெட்டிப் போட்டுக் கொண்டிருந்தேன்..."

"இந்தக்கத்தி வீட்டுப்பாவனைக்குரியதல்ல, 'கிறிஸ்' கத்தி! சொல்லிச் செய்வித்தது ஏன் இதைச் செய்வித்தாய்?..."

"ஐயா! ஐயா...இதை நான் செய்விக்கவில்லை ஐயா!..."

"கடையில் வாங்கினுயா?"

"இல்லை ஐயா!"

"அப்படியானுல் நீயே செய்தாய்?"

"ஐயோ! ஐயா! இல்லை ஐயா! நான் செய்யவில்லை!"

"பின் என்ன, திருடினுயா?"

"ஐயா! நான் இதை ஏலத்தில் வேண்டினேன்."

"என்ன? ஏலத்திலா?"

"ஆமாம் ஐயா! ஒரு நாள் கோட்டடியிலை சாமான்களை ஏலம் போட்டுக்கொண்டிருந்தினம். எல்லாரும் நல்ல நல்ல சாமான்களையெல்லாம குறைந்தவிலையில் வேண்டிச்சினம். அந்தக் கத்தி அழகாயிருந்தது அதோடு ஒரு கைத்தடி, ஒரு பழைய கம்பளம், ஒரு மண்வெட்டி எல்லாமாக மூன்றுரூபாய்க்கு ஏலம் விட்டார்கள். அதனுல்த்தான் வேண்டினன் ஐயா! அந்தக் கைத்

தடியைக்கூட மார்க்கண்டுவுக்குத் தான் கொடுத்தனுன். அதாலே தான் அவர் அண்டைக்கு என்னே யும் அடித்தவர்...''

''ஹா!'' நீதிபதியின் இருதயத்தில் ஒரு பொறி பறக்கிறது.

'பொன்னையா கத்தியை வாங்கியது அதன் பளபளப்பிற்காக. அழகிய அதன் அமைப்புக்காக, குறைந்தவிலைக்காக. சந்தேகமில்லை. இந்தக்கத்தி அவனிடம் இல்லாதிருந்தால் இன்று ஒரு அருமையான உயிர் இல்லாதிருந்திருக்காது. ஆனுல் அவனிடம் கத்தி இருக்கவேண்டிய காரணம்? ...ஏலம்! ஆமாம் ஏலம்தான்! ஏலமிட்டதனுல்த்தான் பொன்னையா அதை வாங்கினுன். இப்படியான 'கிறிஸ்' கத்திகள் சொல்லிச்செய்விப்பதுதான். கடைகளில் விற்பனேக்கு இல்லாதவை. கறுப்புச் சந்தையில் கிடைத்தாலும் பத்துப்பதினைந்து ரூபாயாக இருக்கும். அந்த விலை கொடுத்து வாங்கவும் இவன் வசதி படைத்தவனல்லன். மலிவாக அதுவும் ஏலத்தில் கிடைத்ததால் வாங்கினுன். யார் ஏலமிட்டார்கள்? யார்? யார்?

'ஆமாம! நீதிமன்றத்தினர்! அரசினர்! கொலை, கொள்ளே, மோசடி வழக்குகள் சம்பந்தப்பட்ட இக்கொடிய 'கருவிகளை' அரசினர் அழிக்காது மலிவாக விற்கின்றனர். வாள், துப்பாக்கி கத்தி எல்லாக்கருவிகளேயுமே மக்களுக்கே மீண்டும் பகிரங்கமாக மலிவாகத் தருகின்றனர். எனவே...எனவே ... குற்றம் செய்தவனைவிட, செய்யத் தூண்டியவனுக்கே—செய்யக் காரணமாயிருந்தவனுக்கே அதிக தண்டனே சுமத்த வேண்டும் என்பது உண்மையானுல்...உண்மையானுல்...

நீதிபதி நிமிர்ந்து கோட்டாரைப் பார்க்கிருர். எவரைத் தண்டிப்பது இப்போது?

அவர்முன் சட்டம் விரிந்து கிடக்கிறது, நடுவில் வகிடெடுத்தது போல இருபக்கமும் பிரிந்து 'நான் இடது பக்கமும் செல்வேன் வலது பக்கமும் செல்வேன் என்று கூறுவது போல புத்தகமாக மாறிக் கிடக்கிறது. அவரால் இருபக்கத்துத் தாள்களேயும் ஒரே நேரத்தில் படிக்க முடியவில்லை. இரு கண்களிருந்தாலும் ஒரு நேரத்தில் ஒரு பக்கத்தைத்தானே படிக்க முடியும்.

சட்டத்திற்கு எப்போதும் இரு போக்கு! இரு பார்வையுண்டு! நீதிபதி பொன்னையாவைப் பார்க்கிருர். தன் இரு கண்களேயும் விழித்துப் பார்க்கிருர். சட்டம் பொய்யையே மெய்யாக்கும்! மெய்யையும் பொய்யாக்கும்.

அவர் சட்டென தன் இரு விழிகளேயும் மூடிக்கொள்கிருர். ஆனுல் அவர் பார்வையை இழக்கவில்லை. இப்போதும் பார்த்துக்கொண்டேயிருக்கிருர்.

நீதிபதி அவனேப் பார்ப்பது தன் இரு கண்களாலல்ல. ஏனெனில் சட்டத்தைப் போன்றதே கண்களும் அல்லது கண்களேப் போன்றதே சட்டமும் என்பது அவருக்கு நன்ருக விளங்கும். இந்தநிர்வாணக் கண்கள் மிகக் குரூரமாக ஏமாற்றி விடக் கூடியவை என்பது அவருக்குத் தெளிவாகத் தெரியும்.

சட்டம் ஒரு இரும்புக் குண்டு அப்படியும் உருளும், இப்படியும் உருளும். வாய்ச் சாதுர்யமுள்ள வக்கீல்என்ற (சக்தியுள்ள) காந்தத்தின் பக்கம் வந்து அது ஒட்டிக் கொள்ளும். அது இயற்கையே!

இந்தத் தடுமாற்ற நிலைக்காகத் தான் இதயமும் இருக்கின்றது. கண்கள் இரண்டு என்ருலும் இதயம் ஒன்று அல்லவா? நீதி என்பது இதயத்தைப் போன்றதுதான். இதயத்தை என்றும் எப்போதும் ஏமாற்றவே முடியாது. அதுதரும் தீர்ப்பு ஒன்றேதான். ஆமாம்!

நீதிபதி பொன்னையாவைத் தெளிவாகப் பார்க்கின்ருர். கண்களாலல்ல, இதயத்தால்!

# பறக்காத பறவைகள்

-சிவராம்-

உலகிலே இன்று வாழும் பறவையினங்களில் மிகப் பெரிய பறவையான தீக்கோழி (Ostrich) பொதுவாக ஏழு அடி உயரமும் 300 இருத்தலுக்கும் கூடுதலான எடையும் கொண்டது. இப் பறவை மற்றப் பறவைகளைப் போன்று வானில் பறக்கமுடியாதது. ஆபிரிக்கா அரேபியா போன்ற நாடுகளின் வெப்பம் மிகுந்த இடங்களில காணப்படும் இப் பறவைகள் எவ்விதமான உணவையும் உணவாகக் கொள்ளக்கூடியவை (Omnivorous). வரட்சியான பகுதிகளில் வாழும் இப் பறவைகள் கூட்டம் கூட்டமாக, ஒவ்வொரு குழுவிலும் 20 பறவைகள் சேர்ந்து வாழ்வன. நாலைந்து பெண் தீக்கோழிப் பறவைகள் ஓர் ஆண் தீக்கோழிப் பறவையுடன் இணைந்துவாழும் இயல்பு கொண்டவை இதன் பலனாக, பெண் தீக்கோழிப்பறவை சுமார் 30 முட்டைகள் வரையில் இடும். பெண் பறவைகள் முட்டைகளையிட்டதும், அவற்றை (முட்டைகளை)ப் பேணிப் பாதுகாத்து அடைகாக்கும் பணியை ஆண் பறவைகளே ஏற்றுக்கொள்கின்றன. தான் இட்ட முட்டைகளைப்பற்றிய கவலைகள் எதுவுமின்றியே தன் நாளாந்த வாழ்க்கையை நடாத்தத் தொடங்கிவிடும் பெண் தீக்கோழி.

மேல் நாடுகளில் தீக்கோழியின் இறகுகளை அலங்காரப் பொருட்களில் ஒன்றாகப் பாவித்துவருகின்றனர். இவை ஆபிரிக்கா, அரேபியா போன்ற நாடுகளில், உயிருள்ள பறவைகளிலிருந்து பெறப்படுகின்றன.

நியூசிலாந்தில் வாழும் பறவைகளில் ஒன்றான கீவி (Kiwi) என்னும் பறவையும், நிலத்தைவிட்டு ஆகாயத்தில் பறக்கமுடியாத பறவை இனத்தைச் சேர்ந்தது இவற்றில் பல இனங்கள் உள்ளன இப்பறவையின் உடம்பு முழுவதையும் மயிர் போன்ற இறகுகள் மூடியிருக்கும். பகற் பொழுதினில் பூமிக்கடியில் குழிகளைத் தோண்டி, அவற்றில் பதுங்கியிருக்கும், இப் பறவைகள், இராக் காலங்களில் குழிகளைவிட்டு உணவைத்தேடி உண்ணும் பொருட்டு அங்குமிங்குமாக அலைந்து திரியும். இவையும் எல்லாவகையான உணவுகளையும் உண்ணக்கூடியவை. இதன்பொருட்டு இப் பறவையின் சொண்டு நீண்டு கூராகவுமிருக்கின்றது.

நியூகினியாவிலும், அதன் அருகில் உள்ள சிறு தீவுகளிலும் வாழும் பறவைகளான "கசுவாரீஸ்" (Cassowaries) 'ஈமு' (Emu) போன்ற பறவைகளும் விண்ணில் பறக்கமுடியாத பறவைகள் இனத்தைச் சேர்ந்தவை. உடம்பெங்கும் சிறு இறகுகளை அடர்த்தியாகக்கொண்ட இப் பறவைகள் மரங்கள் செறிவாக இல்லாத காடுகளில் வாழ்வதைக் காணலாம். இவை 5 அடி உயரமானவை. இராப் பறவைகளான இவற்றிலும் ஆண்பறவை, பெண்பறவையுடன் இணைந்து வாழ்ந்தபின், பெண் பறவை இடும் முட்டைகளை அடைகாக்கும் அரும்பணியினை ஆண் பறவைகளே மேற்கொள்வன.

குளிர்ப் பிரதேசங்களில் குறிப்பாக தென்துருவப் பகுதியில் 'பெங்குவின்' (Penguin) என்னும் பறவைகள் கடலில் கூட்டம் கூட்டமாக வாழ்கின்றன. நான்கு அடி உயரமுள்ள இப் பறவையின் கைகள் இரண்டும் 'நீரில்' நீந்துவதற்கேற்றவாறு துடுப்பைப்போன்று அமைந்துள்ளன. 'பெங்குவின்' பறவைகளில் 20 இனங்கள் உள்ளன. ஒரு இனப் பறவையாவது நீரைவிட்டு அண்டவெளியில் பறக்கமுடியாமல், நீந்தியேதான் தாம் செல்லவேண்டிய இடங்களுக்குச் செல்லுகின்றன. இப் பறவைகள் சில வேளைகளில் இரண்டு கால்களால் நிலத்தை ஊன்றிக்கொண்டு எழுந்து நிற்கும்போது ஒரு சிறு மனிதன் நிற்பதைப்போன்றிருக்கும்.

தென் அமெரிக்காவில் வாழும் பறவைகளிலொன்ருன 'ரீஸ்' (Rheas) என்னும் பறவை திறந்தவெளியில் உலாவுவதைக் காணலாம். நான்கு அடி உயரமாக வளரும் இப்பறவையும் பறக்க இயலாத பறவை இனத்தைச் சேர்ந்தது.

எட்டு அடி உயரமாக வளரும் 'மோஸ்' (Moas) எனும் பறவை நியூசிலாந்தில் வாழ்ந்தது. இவையும் வானில் பறக்கமுடியாத பறவை இனத்தைச் சேர்ந்தது. பலவித காரணங்களினுல் இப் பறவைகள் யாவும் அழிந்து ஒழிந்துவிட்டன. இவற்றின் எலும்புக்கூடுகள் நியூசிலாந்தின் பல பகுதிகளில் மண்ணில் புதைந்திருக்கக் காணப்பட்டன.

இதனைப் போலவே மடகஸ்கார் தீவில் "ஆனைப்பறவை" (Elephant Bird) என்னும் ஒருவிதப் பறவை வாழ்ந்தது. பத்து அடி நீளமாக வளரும் இப்பறவையின் எலும்புக்கூடுகள் தாம் இன்று உள்ளன. இவையும் அருகிப்போய் இன்றில்லாத (Extinct Bird) பறவைகளாகக் கருதப்படுகின்றன.


# 3/-

## கலைச்செல்வியின்

ஆண்டுச் சந்தா

**மூன்று ரூபா.**

அனுப்பவேண்டிய முகவரி:

**கலைச்செல்வி**

புகையிரதநிலைய வீதி,

சுன்னுகம்.


## சொர்க்கஞ் சமைக்கும் மனிதர்!

இந்த உலகினி லிருக்கின்ருேர்
யாவரு மெவ்விதம் மனிதராவார்
சொந்த முயற்சியா லுயர்வோரே!
சொர்க்கஞ் சமைக்கும் மனிதராவார்!

உ. இ. தமிழ்ச்செல்வன்

# இன்பம்...!

**புல்**—பச்சைப் பசேலென்ற புல்...முளைத்து இரண்டே வாரங்கள் தான்...சின்னஞ் சிறிய இலைகள் விரிகின்றன...தலை மடிகின்றது. நுனியிலே பனிதான் காரணம்—ஆதவன் கதிர்கள் எங்கும் பரவுகின்றன, புல் நுனிப்பனி காய்கின்றது. —தன் சிறிய இலைகளை விரித்துக் காற்றின் அசைவால் ஆடுகின்றது புல்...ஓரிரு நிமிடங்கள்...ஆடுகள் கடிக்கின்றன. ''ஆண்டவா! என்னை ஏன் இத்தனை சிறிய புல்லாக்கினாய்! அதனாற்தானே ஆடுகள் என்னைக் கடிக்கின்றன. என்னை மரமாக்கமாட்டாயா?" —கடிபட்ட புல் ஆண்டவனை வேண்டுகிறது.

**மரம்**—சடைத்துப் படைத்து ஆற்றங்கரையில் நிமிர்ந்து நிற்கின்றது...கெம்பீரம்...அழகு— ஒரு சில மாதங்கள் தான். ஆற்றின் அலைகள் வேரை அரிக்கின்றன. யார் யாரோ மரத்தின் மேலேறி கொப்புகளையும், கிளைகளையும், வெட்டுகின்றனர். மரத்தால் வலியைப் பொறுக்க முடியவில்லை. அலறுகின்றது. வெட்டிச் சரிக்கப்பட்ட கிளையில் வளைந்து நெளிகின்றது பாம்பொன்று. பாம்பைக் கண்ட மனிதர்கள் அலறிப் புடைத்துஓடுகின்றனர். ''ஆண்டவா! புல்லாக இருந்தேன்—கேட்டேன் மரமாக்கினாய், என்னை எல்லாம் வெட்டித் துன்புறுத்துகின்றார்களே, என்னால் பொறுக்கமுடியாது கண்டவர்கள் பயந்து செல்லும் வண்ணம் என்னை ஊர்ந்து செல்லும் பாம்பாக்க மாட்டாயா?''—ஒரு சில இலைகளுடன் ஆற்றின் போக்கால் பாதி சரிக்கப்பட்ட மரம் ஆண்டவனிடம் வேண்டியது.

**பாம்பு**—கண்டவர்கள் பயந்தனர். பாம்புக்குஉள்ளூரச் சிரிப்பு...மிடுக்கு...சில மாதங்கள் தான்—விர் என்று பறந்துவந்தன கற்கள் பாம்பை நோக்கி புற்றை விட்டுத் தலைநீட்டும்போதெல்லாம் கல்லெறி பாம்புக்குப் பல நாட்களாகப் பசி. இரைதேடப் புற்றை விட்டு வெளிவர முடியாத நிலை. வந்தால் கல்லெறி. "ஐயோ இவர்களுக்குப் பயந்து எவ்வளவு காலந்தான் நான் வாழ்வது. எல்லாவற்றையும்அடக்கி ஆளும் சக்தியுடைய மனிதனாக ஆக்க மாட்டாயா ஆண்டவனே!''

**மனிதன்**—இல்லை - ஏழை- அன்றாட வாழ்க்கைக்கே அல்லல். தன் பசியைப் போக்க மற்றவர்களை எதிர் நோக்குகின்றான்......பசி தீர்ப்பார் எவரும இல்லை--பசி...பசி... மனக்கவலை அதிகரிக்கின்றது...... அப்பப்பா! என்ன பசி...

...சீச்சீ...என்ன வாழ்க்கை...... புல்லாய் இருந்தால் ஆட்டின் பசியைப் போக்குவேன்...இப்போ என் பசியைப் போக்க...மனித வாழ்வே வேண்டாம்!

சி. திருச்செல்வம்

இளமை மாருத இன்பக் காதலர்களாய் முகத்தோடு முகம் புதைத்துக் காட்சிதரும் முதல்வனும் முதல்வியும்...எவ்வளவு அழகு? அந்தப் படத்தைப் பார்க்கும் பொழுது என் உள்ளத்திலே எவ்வளவு அமைதி!

என் 'டாக்சி'யின் 'ஸன்செட்' டிலிலேஒட்டியிருந்த அந்தப்படத்தை இத்துடன் எத்தனை தரம் பார்த்திருப்பேன்! ஸ்ரெயரிங் வளையத்தைப் போல் கறுப்பாக முடிவற்றும் இருண்டு முடிவு தெரியாது தவிக்கும் என் உள்ளத்தில் ஒளி பிறக்க...அந்தப் படம். கார் ஓடியபின் றேடியற்றரிலே கொதிப்பது நீரா? வாழ்க்கை ஓட்டத்தின் பின் என்னுள் கொதிப்பது உள்ளமா?

அந்தப்படம்... ஆகா! என்ன அழகு! என்ன சாந்தம்! என்னை—என் எண்ணத்தை எல்லாவற்றையுமே மறக்கிறேன். இது ஒரு வெறியா?

உலகத்தை மறக்க வைக்க—நினைவின் நிழலை மறைக்க வைக்க வெறியால் தான் முடியுமா?


என்ன இன்பம்! பேரின்பம்.

இரைச்சல் ஒலி. முன் டாக்சி இருவரை ஏற்றிக் கொண்டு முன்னேறுகின்றது. என் டாக்சி'யை முன் செலுத்தி அந்த இடத்தில் நிறுத்துகின்றேன். முன் என் 'டாக்சி' நின்ற இடத்தில் என் பின்னுல் நின்ற...

...ஒன்று போனுல் அந்த இடத்தில் இன்னென்று. இடம் காலியாக இருக்காது. இடம் நிரம்புகின்றது...மனித வாழ்க்கையும் இப்படித்தானே?

எல்லாவற்றிலும் மனித வாழ்க்கை பிரதிபலிக்கின்றதா? மனிதனுல் ஆக்கப்பட்டதுதானே இந்த ஒழுங்குமுறை! வாழ்க்கை ஒழுங்குமுறையும் அப்படியே! எதிலும் வாழ்க்கையின் பிரதிபலிப்பைக் காணலாம்.

பச்சை, சிவப்பு, மஞ்சள்...நிற பேதங்கள். எத்தனை அழகு?




அதோ...சிவப்புச் சேலை... மானிப்பாய் பஸ்சில் இருந்து இறங்குவது...? சீ! இருக்காது.

முகத்தைத் திருப்புகிறேன். அந்தப் படம்...காவேரி. தலையிலிருந்து பாய -பிறைசூடிய அழகனுய் ...அவன். பெண்மையின் மென்மை. சாந்தம், கருணை ... பார்வதியின் முகம். கூர்ந்து பார்க்கிறேன்...

அமைதி! அமைதியின் நடுவே ஒரு சுழி. இருள். இருளின் நடுவே ஒளி...ஒளி...ஒளியின் நடுவே அந்த சிரிப்பு...அந்த விழிகள்... அந்தக் கூந்தல்...

"தேவி"

—நெஞ்சிற்குள் ஒன்றுமே இல்லையா? இதென்ன வேதனை!

'அம்மா தாயே மன்னித்துவிடு' உன்னைப் பார்த்து எனக்கு இந்த உணர்ச்சியா? என் அமைதி ஏன் கலைந்தது? என்றுமேயில்லாத—அடி மனத்தில் உறங்கிக்கிடந்த எண்ணம் இன்று...ஐயோ தாயே!

இன்று ஏதோ நடக்கப்போகின்றது. என் மனம் என்றுமில்லாதபடி...ஏன? பின்னல் நடப்பதை முன்னல் சிலசமயங்களில் என்னல் உணரமுடியும். சிலருக்கு இந்த உணர்வு உண்டு என்பது மனோதத்துவ உண்மைதானே? நம்பாவிட்டால் அந்த உண்மைஎன்னுடன் இருக்கட்டும்—இறக்கட்டும்.

அதோ...சிவப்புச்சேலை, கறுப்பு ஜெக்கெட்! எனக்குப் பிடித்த அதே நிறங்கள். அந்த நடை...எனக்குப் பிடித்த அந்த நடை...அமைதியான, பெண்மைக்கேற்ற அந்த நடை...அருகே போவது அவள் கணவனு? வெள்ளை லோங்ஸ் போட்டு...நல்ல உயரம். ஸ்ரைலான நடை...பொருத்தமான ஜோடி.


கலைச்செல்வி

விற்பனையாளர்

அமீனியா ஸ்டோர்ஸ்

மார்க்கட், நிந்தவூர்.


போனவர்கள் யாருடனே கதைக்கிருர்கள். உடனே திரும்புகிருர்கள். என்னை நோக்கி வருகிருர்கள் 'டாக்சி' பிடிக்கத்தான் வருகிருர்களோ?—என்னை நான் உசார் படுத்திக்கொள்கிறேன். மீண்டும் அவர்களை நோக்குகிறேன் ...

சிவப்பு, கறுப்பு, வெள்ளை... சிவப்பு, கறுப்பு ஆம்! அது? அந்த நடை? அதே சிரிப்பு...அதே கூந்தல்...அதே கண்கள்...ஆ! ஐயோ! தேவி ஐயோ! தேவி! ஐயோ நீயா தேவி! இரண்டு வருடங்கள்...அதற்குள் இவ்வளவு மாற்றமா?"

பக்கத்தில் உன் கணவனு தேவி? என் முன்னல்...என்னுள் ஒன்றுமே இல்லையா? இதென்ன உணர்ச்சி? வெறுமை! சலனம்!

அந்தப் படம்...எத்தனை அழகு? முதல்வனும் முதல்வியும்...நானும் நீயும்...சீ! இதென்ன எண்ணம்? அமைதியில்லை! கொதிக்குமுள்ளம்! வேகும் மனம்!

கண்களை இறுக்கிமூடுகின்றேன். இருள். 'ஸ்ரெயரிங்'கில் தலை சாய்கின்றது.

"நல்லூருக்குப் போகலாம் தானே?"—நல்ல குரல், ஆண்குரல். —அவன் குரல்.

சுய உணர்வு திரும்ப...சிவப்பு... கறுப்பு..."இது இல்...ஓம்"–தலையை மறுபக்கம், திருப்பிக் கொள்கின்றேன்

பின்னல் இருவரும் ஏறி அமர்கின்ருர்கள்

துவாய்த் துண்டால் என் தலையை மறைத்துத் தலைப்பாகை

கட்டுகின்றேன்

அந்தப் படம்...!

கியரை நியூட்டராக்கி, சுவிச்சைப் போட்டு 'செல்ஸ்ராட்' பிடிக்கின்றேன். இரைச்சல் ஒலி. மீட்டரைத் தட்டிவிடுகின்றேன். கிளச்சை அமத்தி, செக்கண்ட் கியர்மாத்தி, 'அக்சிலேற்றரைச்' சிறிது மிதித்து' 'கிளச்சை' மெதுவாகவிட... 'டாக்சி' புறப்படுகின்றது. நான் செய்கின்றேனு? பழகிய என் உறுப்புக்கள் செய்கின்றனவா?

பின்னுல் பார்க்கும் கண்ணுடியால் அவளை—என் தேவியைப் பார்க்கின்றேன்.

அந்தந் புள்ளி—இடது கண் புருவத்திற்கு மேலுள்ள அந்தக் கறுப்புப் புள்ளி...எவ்வளவு அழகு?

'நான் உன்னைக் கூர்ந்து பார்க்கின்றேன். உன் முகத்தை இரு மலர்க்கரங்களாலும் பொத்துகின்ருய்...விரல் இடைவெளியினூடாக...

"ஏன் ஒளித்துப் பார்க்கிருய் வடிவாப்பார் தேவி"—உன் மலர்க் கரங்களை மலர்த்த...

'க்ளுக்' கென்று சிரித்துக் கொண்டு முகத்தை உன் மடியில் கிடத்தி மறைக்க...

மெல்லத் தொட்டு நான் உன்னை...

'கிறீச்'—பிறேக் போட்டு 'டாக்சியை' மெதுவாக்குகின்றேன்.

வலது பக்கத்தால் பஸ் ஒன்று வருகிறது அதை விட்டுத்தானே நான் போகவேண்டும்!

கண்ணுடியால் பார்க்கின்றேன்...குனிந்து நாணத்துடன் அமர்ந்திருக்கும் தேவி!

தேவி, நான் உன்னைக் காதலித்ததிற்கு முதல் காரணமே இந்த நாணம் தான் தேவி!

வீதியால் போகும் பொழுதும் சரி, மெதுவாக அமைதியாகத் தலை குனிந்து செல்லும் அந்த முறை

பாடசாலையில் ஆசனத்தில் அமர்ந்திருக்கும் பொழுதும் சரி கால்களை ஒடுக்கி, அமைதியாக—பெண்மையின் மென்மை தவருது அமர்ந்திருக்கும் அந்த அழகு நிலை...

மற்றைய மாணவிகள்...சீ! அவர்கள் புது நாகரீக நங்கைகள்... கண்ணுக்குமை, அது இது என்று...

நீ பழமை விரும்பியா? பண்டைக் காலப் பெண் இனத்தின் வாரிசா? உண்மைத் தமிழ்ப் பண்பு செத்துவிடவில்லை. ஆயிரத்திற்கு ஒருவரோ இருவரோ உண்மைத் தமிழ்ப் பெண்ணுகத் தோன்றிக் கொண்டே இருக்கிருளா?

தமிழ்ப் பெண்ணே! உன்னைக் காதலிக்கின்றேன். என் உயிரினும் மேலாக நான் உன்னை நேசிக்கின்றேன். தெய்வமாக என் உள்ளக் கோவிலிலே குடியேறுகிருய்...

கைக்கிளை!

காதலாக இதை மலர்விக்க உன் உள்ளத்தை நான் அறிய வேண்டியிருக்கிறதே...

மகேஸ்...உன் உதவி இல்லாவிட்டால் தேவியின் உள்ளத்தை நான் அறிந்திருக்க முடியாதே...

என் காதலில் என்ன ஆச்சரியமென்றால்...நான் காதலிக்க முன்னரே அவள் என்னைக் காதலித்தாளாம்! இது என்ன புதுமை! தெய்வீகமென்பது இதுதானா? இதில் நம்பிக்கையற்ற நானதெய்வீகத்தை அன்றுதான் முதல் முதலாக நம்புகிறேன்—தெய்வீகக் காதல் உடமுடையதென்பதை உறுதியாக நம்புகிறேன்.

அரும்பிய எம் காதல் மலர்ந்து மணம்வீசுகின்றது. ... அந்த நறுமணத்திலே இருவரும் எம்மை மறக்கின்றோம். எதிர்கால வாழ்வை எண்ணி எண்ணி...மனக்கோட்டம் பருவகாலப் பகற்கனவு!

படிப்பு ஓடவில்லை. அடிப்படை—அத்திவாரத்தில்ஆட்டம். பரீட்சை தோல்வி!

பிறேக்கை அமத்திக் காரை மெதுவாக்குகின்றேன். என் 'டாக்சி'க்குக் குறுக்கே கன்றுடன் போகும் பசுமாடு ... கன்றுக்கு ஆபத்தோ என்று அதுபடும வேதனை. அப்பப்பா! தாய்மை உணர்ச்சி எப்படிப்பட்ட அற்புத உணர்ச்சி!

அம்மா...உன் பாசத்தை நினைக்கவே நெஞ்சம் புல்லரிக்கிறதம்மா? என் காதலைப்பற்றி நான் உனக்குக் கூறுகின்றேன். அப்பொழுது நீ கூறிய அறிவுரைகள்...

'அடி அத்திவாரம் பெலனற்றதென்றால் கட்டிடம் நிலைக்குமா தம்பி?'—என்னைப் பார்த்து நீ கேட்கின்றாய்! உன்னைவிடக் கூடப் படித்த என்னால்...

புத்தகப் படிப்பும் ஒரு படிப்பா? நீ அனுபவப் பள்ளியில் படித்தவளம்மா! உன் அறிவுரை ஆழம் நிரம்பியதம்மா!

என் வாழ்வை அமைக்கக் கூடிய அத்திவாரம் என்னால் ஆக்கப் படவில்லை. அதற்கிடையில் என் மனதில் ஒரு கோட்டை.

வெலிங்டன் தியேட்டர் சந்தியால்'டாக்சி'யைத் திருப்புகின்றேன். கண்ணாடியால் பின்னால் நோக்குகின்றேன்...

ஓரக்கண்ணால் தன் கணவனைப் பார்க்கிறாள் தேவி. ஏதோ குறும்பு அவர் செய்திருக்கவேண்டும். அந்தப் பார்வை—தேவி! எனக்குப் பிடித்த அந்தப் பார்வை...

'இந்தத் தியேட்டரிலே அன்று ஏதோ ஒரு படம்...இருவரும் பார்த்தோமே...அப்பொழுது நான் ஏதாவது குறும்பு செய்ய, இந்தப் பார்வையால் என்னைக் கொல்லாமல் கொன்று...என்னை வென்று...

படம் இருவரும் ஒன்றாக இருந்து பார்த்தோமானால்...படம் எப்பொழுதாவது புரிந்திருக்கின்றதா? படத்தை எங்கே பார்ப்பது? ஒருவரை ஒருவர் பார்த்து—ரசித்து சுவைத்து அனுபவித்து...

தேவி! அந்த நாட்கள்...சிதறிய கண்ணாடியாகி...இதென்னவேதனை? என் நெஞ்சிற்குள் ஒன்றுமே இல்லையா? வெறுமையா?

அந்தப் படம்...முதல்வனும் பார்வதியும்...எவ்வளவு அழகு? சாந்தம் அமைதி-

'நிறுத்திப் புறப்படு'—அந்த அறிவித்தல் கண்களில் தட்டுப்படுகின்றது.நல்லூர்க் கந்தன் ஆலயம்

ஆலயமணியின் ஒலி நாதம் என் செவிப்புலனை மீட்ட...அமைதி நெஞ்சிலே குடிகொள்கின்றதே! ஒலியின் மகிமையா? இடத்தின் மகிமையா?

'முருகா'— 'ஸ்ரெயரிங்'கிலிருந்து கைகளை மலர்த்திக் கரம் கூப்பி வணங்குகின்றேன்... .

'என் காதல் வெற்றிபெற்றால் நான்—உன் திருவிழாக்களுக்கு வருவேன். இல்லையேல் வரமாட்டேன்'— இது ஆரம்பத்தில் நான் உன் முன்னிலையில் கொண்ட சபதமல்லவா முருகா? இரண்டு வருடங்களாக நிறைவேற்றிவிட்டேன். இனியும் நிறைவேற்றியே...

முருகனில் என்ன தவறு? என் மேலல்லவா முழுத்தவறும்! நான் நினைத்திருந்தால் எம்காதல்வெற்றி பெற்றே இருக்கும். ஆனால்...நான் அவசரபுத்திக்காரன்!

"தேவி எனக்காக எத்தனை வருசம் காத்திருப்பாய்?"— என் கேள்வி இது.

"எத்தனை வருசமெண்டாலும்"— நெஞ்சிற்குள்—அடி நெஞ்சிற்குள் இருந்து உறுதியாய்ப் பிறக்கும் தேவியின் ஆத்மாவின் உறுதி மொழி.

தேவி நான்தான் பாவி! நான்தான் வஞ்சகன்! நான்தான் துரோகி! இல்லை தேவி! நான் துரோகியே அல்ல! உன் நல்வாழ்வை விரும்பித்தான் நான் அந்த முடிவிற்கு வந்தேன்.


உங்கள் உருவத்தை

உயிரோவியமாக்க ——

எங்களிடம் வாருங்கள்

**சித்ராலயா**

-புகைப்படக் கலையகம்-

ஸ்ரான்லி வீதி, :: யாழ்ப்பாணம்

என்னை நம்பி நீ காத்திருப்ப தாக இருந்தால் இன்னும் நீ கன்னிப்பெண்ணாக... இன்றுமாத்திர மல்ல இன்னும் ஐந்து வருடங்களுக்கு மேலாக கன்னிப்பெண்ணாகவே நீ காத்திருக்கவேண்டியிருந்திருக்கும்... நீ காத்திருப்பாய். அதில் எனக்கு நம்பிக்கை இருந்தது தேவி, நிறைய இருந்தது. இருந்தும்...

நீ காத்திருந்தால் உன்னுடைய இளைய மூன்று சகோதரிகளும்... உன் காலத்தைக் கொல்ல எனக்கு உரிமை இருக்கலாம். அவர்கள் காலம் என்னால் ஏன் கொல்லப்பட வேண்டும்? என்னிடம் என்ன இருக்கிறது? இவ்வளவு காலமும்—என் கடமைகள் நிறைவேறுமட்டும், நீ காத்திருந்து, என்னை அடைந்தும் என்ன சுகம் காணப்போகின்றாய்? உன்னை ஏழ்மையில் போட்டு வதைக்க நான் தயாராக இல்லை! தேவி தயாராக இல்லை!

என் அத்திவாரம் ஆட்டம் கண்டது. கலங்கிய என் உள்ளக் குளத்தில் மிதப்பது... இறந்த மீனா? சீ! நாற்றமடிக்கும் முடிவு.

என்னை நீ வெறுக்க வேண்டும். வெறுக்கச் செய்யவேண்டும்.

குடித்தேன்—கூத்திகளுடன் திரிந்தேன். உலகத்தின் கண்களுக்கு! உனக்குத் தெரியவேண்டுமென்பதற்காக... என நெஞ்சத்திற்குத் தெரியும் தேவி அது அவ்வளவும் வெறும் நடிப்பு. நம்பமறுத்த நீ கண்ணால் கண்டபின்னர் நம்பினாய்!

கண்ணீரை அருவியாக்கி... ஐயோ! தேவி அன்று நீ அழுத அழுகை... உன் கண்களில் இருந்து பெருகியது இரத்த ஆறா?

தேவி என் நெஞ்சை இரும்பாக்கினேன். "உன்னை நான் காதலிக்கவில்லை, உன் உடலைக் காதலித்தேன் இச்சைக்காக..." துணிந்து, இரும்பு நெஞ்சத்தை உருக்கிவந்த வார்த்தைகளிவை...

காறித்துப்பினாய்... பேசினாய்... மகிழ்ந்தேன். நீ வாழப்போகின்றாய்! சந்தோஷமாக — இன்பமாக வாழப்போகின்றாய்...

காதலில் தோல்வியென்றால் கன்னியாகவே வாழ்வேன் என்று அன்று நீ கூறியதுபோலவே...... கன்னியாக வாழ உறுதிகொண்டாய்

உன் உறுதி, கடமை உணர்வாலும், காலத்தாலும் தளர்த்தப்பட்டது. இரண்டுவருடங்களுக்கு முன்னர் ஒருநாள் நான் கேட்ட அந்த வார்த்தைகள்...

"தேவி பெரிய உத்தியோகத்தர் ஒருத்தரை மணந்து வாழ்கின்றாள்"—என் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

என் தாய்க்குக் கூறுகிறேன். அவ அழுதா? ஏன் தேவி அழுதா? எனக்குப் புரியவேயில்லை. தாய்க்குலமே புரியாத புதிரா?

தேவி! இன்று உன்னை உன் கணவனுடன் பார்க்கும்பொழுது என் நெஞ்சத்தின் ஒரு பகுதி எவ்வளவு மகிழ்கிறது தெரியுமா? மறுபகுதியில் ஏன் இந்தச் சலனம்...

'முருகா தேவி இன்பமாக வாழவேண்டும். வேணடுமானால் என் வாழ்வைப் பலியாக ஏற்றுக்கொள்' துன்பமெல்லாம் என்னிடம் தா· இனி அவளுக்குத் துன்பத்தைக் கொடுக்காதே இறைவா? எனக்கு இந்தச் சலனத்தைத் தராதே...என

நெஞ்சில் நிறைவாக மகிழ்ச்சியையும், அமைதியையும் நிலைநிறுத்து'—என் உள்ளம் முருகனிடம் மன்றுடுகின்றது.

"முதல்வாற ஒழுங்கையால திரும்புங்கோ"— தேவியின் கணவனின் குரல்.

'டாக்சி'யைக் கவனமாகத் திருப்பி ஓட்டுகிறேன்.

"சிலோவா, இடதுபக்க ஒழுங்கையால்..."

அவர்கள் வீட்டிற்கு முன்னால் 'டாக்சி'யை நிறுத்துகின்றேன். இப்பொழுது அவர்களிருப்பது புதுவீட்டில்! அழகான புதுவீடு.

கதவைத் திறந்து இருவரும் இறங்குகிறார்கள். அவசரமாக அவர் உள்ளே செல்கின்றார். 'காசு எடுக்கவா?'

தேவியும் அவரைத் தொடர்ந்து போகின்றாள்... பின்—திரும்பி வருகின்றாள் என்னை நோக்கி! பின்னால் ஒரு குழந்தையையும் கையில் கொண்டுவருவது...? தெரியாது! ஒரு நடுத்தர வயது அம்மா!

அவ இடுப்பில் இருந்து தேவியைக் காட்டி அழுகிறது... அழும்பொழுது அது அழகாக... வெள்ளை வெளேரென்று... சுருண்ட கேசம்... தொக்கைப்பிள்ளை...

"அழாதையடா குஞ்சு,ஓடிவாடா சந்திரன், குட்டிச் சந்திரன் வாடா... சந்திரா அழாதையப்பு" — அந்த அம்மாவிடம் குழந்தையைப்பெற்றுத் தேற்றுகிறாள் தேவி!

'சந்திரன்'—என்பெயர்— உன் குழந்தைக்கு என்பெயர், வாழ்விலே தோல்விகண்ட துரதிர்ஷ்டம் பிடித்தவனின் பெயர்.

'தேவி! நீ என்னை மறக்கவில்லையா?—என் நெஞ்சம் நிறைகிறது, விம்மிப் பூரிக்கிறது மனம் மகிழ்கிறது—சலனம் தெளிகிறது...

அன்பு அழிவற்றது ஒரு உறவில் அது கிடைக்காவிட்டால் இன்னொரு உறவாக அதை மாற்றிவிட்டால்...

மீட்டரிலே காசைப் பார்த்து தேவி காசை என்னிடம் நீட்டுகிறாள்—

ஒரு துளி கண்ணீர் அவள் கரத்தில் சிந்துகின்றது! திடுக்கிட்டுத் திரும்பிக் கவனமாகப் பார்க்கின்றாள்...

ஆச்சரியத்தால் அவள் முகம் மலர...

"சந்திரன்" — அவள் அழைக்கிறாள். அதில் கலந்திருப்பது தாய்ப் பாசமா?—தாய்மை உணர்வா? தாய் மகனை அழைப்பதுபோலவே அவள் என்னை அழைக்கிறாள் தன் தோளில் கிடந்த மழலைச் செல்வத்தை அணைத்து நிறைவுபெறுகின்றாள்...

தேவியின் மகன் நான்!

"அம்மா தாயே"–தாய்மேலுள்ள பாசத்தைக் குரலிலே தேக்கி நெஞ்சின் அடியிலிருந்து அழைப்பது என் ஆத்மாவா? கரங்கூப்பிவணங்கி விடைபெறுகின்றேன்.

நெஞ்சம் நிறைகிறது. பேரின்பம் கரக்கிறது. சலனம் தெளிகிறது. அமைதி! இனி என்றுமே அமைதி! அமைதி!

'அம்மா'...'அம்மா,...'அம்மா'—

# அன்புள்ள ஆசிரியருக்கு......!

கோமூர்பு சிவம்

-1-

''மணியோசை'' 2-5-64 இதழில்-

கோவிலடியைச் சேர்ந்த எனது தகப்பனாராகிய திரு. மா. கருப்பண்ணன் காலமானதையொட்டி கடித மூலமும் நேரிலும் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

இங்ஙனம்,
கருப்பண்ணனின் குமாரன்.

-2-

அன்புள்ள ஆசிரியருக்கு,

தங்கள் ''மணியோசை'' பத்திரிகையில் வெளிவந்த 'நன்றி நவிலலை'க்கண்டேன். அதில் உள்ள ஒரு பிழையைக் குறிப்பிட விரும்புகின்றேன். பத்திரிகையில் ''கோவிலடியைச் சேர்ந்த மா. கருப்பண்ணன்'' என்றிருப்பது பிழையாகும். அது ''கேணியடியைச் சேர்ந்த மு. கருப்பண்ணன்'' என்றிருக்க வேண்டும்.

இப்படிக்கு,
மு. கருப்பண்ணன்.

-3-

''மணியோசை'' 20-6-64 இதழில்-

எமது 2-5-64 இதழில் மூன்றும் பக்கத்தில் வெளிவந்த ''நன்றி நவிலல்'' விளம்பரத்தில் ''கோவிலடியைச் சேர்ந்த மா. கருப்பண்ணன்'' என்றிருப்பதை ''கேணியடியைச் சேர்ந்த மு கருப்பண்ணன்'' என்று திருத்தி வாசிக்கும்படி நேயர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

ஆசிரியர், ''மணியோசை''.

-4-

அன்புள்ள ஆசிரியருக்கு,

20-6-64ல் வெளியான ''மணியோசை''யில் உள்ள திருத்தக்குறிப்பைக் கண்டேன். ஆனால் 2-5-64ல் வெளிவந்ததாகச் சொல்லப்படும் ''நன்றி நவிலலை'' நான் பார்க்காததினால் தாங்கள் கேட்டுக்கொண்ட பிரகாரம் திருத்தி வாசிக்க முடியாதிருக்கிறது. ஆகையால் தயவுசெய்து ''நன்றி நவிலல்'' வெளிவந்த 2-5-64 இதழ் ஒன்றை உடன் அனுப்பி வைக்கவும். இத்துடன் 25 சதத்திற்குத் தபால் தலைகள் அனுப்பியுள்ளேன்.

தங்களன்புள்ள,
சிரஞ்சீவி சித்திரவேல்

-5-

அன்புள்ள ஆசிரியருக்கு,

தங்கள் பத்திரிகையில் தாங்கள் வெளியிட்ட திருத்தக் குறிப்புக்கு நன்றி. 2-5-64ல் வெளியான விளம்பரத்தில் மேலும் ஒரு தவறு இருக்கின்றது. விளம்பர முடிவில் ''கருப்பண்ணனின் குமாரன்'' என்றிருப்பது பிழையாகும் எனக்கு இன்னும் கலியாணமே ஆகவில்லை. எனவே, ''எனது தகப்பனாராகிய'' என்பதை ''எனது சகோதரனாகிய'' என்றும், ''கருப்பண்ணனின் குமாரன்'' என்று கடைசியில் இருப்பதை ''கருப்பண்ணனின் சகோதரர் என்றும் திருத்திக் கொள்ளவும். இந்தத் திருத்தங்களையும் எனது முந்திய கடிதத்தில் குறிப்பிட முடியாமல் போனதற்கு மிகவும் வருந்துகின்றேன்.

இப்படிக்கு,
மு. கருப்பண்ணன்

-6-

''மணியோசை'' 10-8-64 இதழில்-

எமது 2-5-64 இதழில மூன்ரும் பக்கத்தில் வெளியான ''நன்றி நவிலல்'' விளம்பரத்தில், ''எனது தகப்பஞராகிய" என்றிருப்பதை ''எனது சகோதரஞகிய'' என்றும், ''கருப்பண்ணனின் குமாரன்" என்றிருப்பதைக் ''கருப்பண்ணனின் சகோதரன்" என்றும் திருத்தி வாசிக்கும்படி நேயர்களைக் கேட்டுக் கொள்ளுகின்ரும்.

ஆசிரியர், ''மணியோசை"

-7-

அன்புள்ள சிரஞ்சீவி சித்திரவேல் அறிவது,

நீங்கள் எழுதியபடி 2-5-64ல் வெளிவந்த ''மணியோசை'' இதழ் கைவசம் இல்லை. அதற்குப் பதிலாக நீங்கள் குறிப்பிட்ட ''நன்றி நவிலலி"ன் இரண்டாவது திருத்தக் குறிப்பு வெளியாகிய 10-8-64 இதழ் ஒன்றை அனுப்பியுள்ளேன். நன்றி.

ஆசிரியர்,
''மணியோசை"

-8-

அன்புள்ள
திரு. கருப்பண்ணனுக்கு,

தங்கள் இரு கடிதங்களும் கிடைக்கப் பெற்ருேம். நன்றி. எமது இரண்டாவது திருத்தக் குறிப்பையும் பார்த்திருப்பீர்கள் என நம்புகின்ரும்.2-5-64ல் வெளியான விளம்பரத்திற்தான தங்கள் கடிதமும் விளம்பர மூலப் பிரதியும் தவறிவிட்டதால், வேறு விசாரணைகளின்றி இந்த இரண்டு திருத்தக் குறிப்புகளையும் சேர்த்திருந்தோம். மேற்கொண்டு எந்தத் திருத்தங்களையும் அனுப்பவேண்டாம் என்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்ரும்.

ஆசிரியர்
''மணியோசை''

-9-

அன்புள்ள ஆசிரியருக்கு,

தங்கள் கடிதம் கிடைத்தது. உங்கள் பத்திரிகையில் வெளிவரும் தொடர் விடயங்களைத் தொகுத்து நூல்களாகவும் 'வால்யூம்'களாகவும் வெளியிடுவதுண்டா? உண்டெனில் திரு. மு. கருப்பண்ணன் சம்பந்தப்பட்ட ''நன்றி நவில"லும் சகல திருத்தங்களும் உள்ள தொகுதியொன்றை உடன் அனுப்பி வைக்கவும், இத்துடன் ஐந்து ரூபாவுக்கு ஒரு மணியோடர் அனுப்பியுள்ளேன்.

தங்களன்புள்ள,
சிரஞ்சீவி சித்திரவேல்.

-10-

அன்புள்ள சிரஞ்சீவி
சித்திரவேல் அறிவது,

எமது பத்திரிகையில் வெளியாகும் எந்த விடயங்களையும் தொகுத்து வெளியிடும் பழக்கம் எமக்கில்லை. நீங்கள் அனுப்பிய பணத்திற்கு உங்களை ''மணியோசை''யின் ஒரு சந்தாதாரராகச் சேர்த்துள்ளோம். இனிமேலாவது உங்களுக்குப் பிடித்த விடயங்களை நீங்களே தொகுத்து 'வால்யூம்'களாகக் கட்டிக்கொள்ளலாம் அல்லவா? நன்றி.

ஆசிரியர்,
''மணியோசை"

-11-

அன்புள்ள ஆசிரியருக்கு,

தங்கள் கடிதம் கண்டேன். 2-5-64ல் வெளிவந்த விளம்பரத்திற்கு நான் முன்பு இரண்டு திருத்

தங்கள் அனுப்பியது உங்களுக்கு நினைவிருக்கலாம். இருந்தும் இப்பொழுதுதான் அந்த விளம்பரம் முழுவதையும் படித்துப் பார்க்க நேரம் கிடைத்தது. அந்த விளம்பரம் நான் காலமானதையொட்டி நன்றி தெரிவிப்பதாகஇருக்கின்றது. ஆனபடியால் நான் எப்பொழுது எத்தனை மணிக்குக் காலமானேன் என்பதைத் தயவு செய்து 'எக்ஸ்பிரஸ்' தபாலில் தெரிவிக்கவும். எனக்கு என்ன சுகவீனம் ஏற்பட்டுக் காலமானேன் என்பதையும் குறிப்பிட்டால் மிகவும் நல்லது.

இப்படிக்கு,
மு. கருப்பண்ணன்

-12-

அன்புள்ள ஆசிரியருக்கு,

தங்கள் கடிதத்திற்கும் தங்களுக்கும் நன்றி. இத்துடன் "நன்றி நவிலல்" ஒன்றும் மூன்று திருத்தங்களும் அனுப்பியிருக்கின்றேன். அவை தரமாக இருந்தால் தங்களுடைய உயர்ந்த, மேலான பத்திகையில் வெளியிடவும். சன்மானத் தொகையை மணியோடர் மூலம் அனுப்புவதே நல்லது.

தங்களன்புள்ள
சிரஞ்சீவி சித்திரவேல்.

-13-

அன்புள்ள ஆசிரியருக்கு,

எனது மனுதாரராகிய மா.கருப்பண்ணனின் குமாரன் திரு'சின்னக் கருப்பண்ணனின் விண்ணப்பத்தின் பேரில் 2-5-64 "மணியோசை" இதழில் வெளிவந்த விளம்பரம் வார்த்தைக்கு வார்த்தை சரியாகவே இருந்ததாகவும், எனது மனுதாரரை ஆலோசியாமல் 26-6-64லும் 10-8-64லும் வெளியிட்ட திருத்தங்களால் விளம்பரத்தின் நோக்கம் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் மனுதார் கருதுவதால், விளம்பரதிற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 49-99 சதத்தையும் திருப்பித்தரவேண்டும் என்று மனுதார் கோருகின்றார்.

மேற்படி மனுதாருக்கு மேற்படி காரணமாக மேற்படி தொகையை ஏழு நாட்களுக்குள் நீங்கள் திருப்பித் தரத் தவறினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியவும்.

வீர.வேலாயுதன்
மனுதாரின் வக்கீல்.

-14-


நமது "மணியோசை" பத்திரிகை ஆசிரியர் நேற்றிலிருந்து காணமல் போய்விட்டார். அவர் கடைசியாகக் காணப்பட்ட போது அவரது சட்டைப்பையில் திருவாளர்கள் மு. கருப்பண்ணன், வக்கீல் வீர. வேலாயுதன், சிரஞ்சீவி சித்திரவேல் ஆகியோரது கடிதங்கள் இருந்ததாகச் சொல்லப் படுகிறது.

இவரைப்பற்றி ஏதாவது தகவல்கள் கிடைக்கின் எமக்கோ அல்லது அண்மையிலுள்ள "மணியோசை" விற்பனையாளரிடமோ தெரிவிக்கவும்.

நிர்வாகி,
"மணியோசை"


**கலைச்செல்வி**

விற்பனையாளர்
கே. அன்ட் கே ஸ்டோர்ஸ்
108, லோவர் வீதி,
**பதுளை**




இ. அச்சுதன்,

திருநெல்வேலி மேற்கு.

கே: 'எத்தனையோ பாவங்களின் பிரதிபலிப்புத்தான் பெண்' என்கிருர்களே, இதைப்பற்றி உங்களின் கருத்தென்ன?

ப: "மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா" என்று பாடுகின்ருர்கவிமணி. கவிமணியின் இந்த மணிமொழியைப் போற்றுபவன் நான்.

கே: சில கணவன்மார், தம் மனைவிமார்களைச் சினிமாப் பார்க்க அனுமதிப்பதில்லையே, ஏன்?

ப: அந்தக் கணவன்மார், கல்யாணமாகாதிருந்த காலத்தில், தியேட்டர்களில் தமது கை, கால்கள் விட்ட சேட்டைகளை இப்போது நினைத்துப்பார்ப்பது ஒரு காரணமாக இருக்கலாம்!

S. குருநாதன்,

காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம்

கே: நண்பர்களுடன் சேர்ந்து நாடகமன்றம் ஒன்றை ஆரம்பித்துள்ளோம். அது முன்னேறச் சட்டம் ஆமோதிக்கிறது; சமுதாயம் மறுக்கிறது, கலையைப்பற்றி அறியாத சமுதாயமோ?

ப: தரமானவற்றைச் சமுதாயம் நிச்சயம் வரவேற்கும்; பூரண ஆதரவையும் கொடுக்கும். வண்ணைக் கலைவாணர் நாடக மன்றத்தின் "திப்பு சுல்தா"னைச் சமுதாயம் வரவேற்றதே! யாழ்-மறுமலர்ச்சிமன்றத்தாரின் "ஆராமுது அசடா"வைச் சமுதாயம் வரவேற்றதே! கே. எம், வாசகரின் "மஞ்சள் குங்கும"த்தைச் சமுதாயம் வரவேற்றதே! கொழும்பு ராஜ் நகைச்சுவை மன்றத்தாரின் நாடகங்களை இன்றும் பலர் பார்த்துப் பரவசமடைகின்றனரே! சமுதாயம் வரவேற்கவில்லை என்பது வீண் குற்றச்சாட்டு. நாட்டுக்குத் தேவையான நல்ல கதையைத் தெரிவு செய்து தக்க முறையில் நடிகர்களுக்குப் பயிற்சியளித்துச் சிறப்பான முறையிலே அரங்கேற்றுங்கள்

சமுதாயம் வாழ்த்தொலி எழுப்பி வரவேற்பு அளிக்கும். ஏதாவது பதவியை வகித்துச் சொந்தப் பெயரைப் பிரபலப்படுத்தவேண்டும் என்ற ஆசையில் இத்தகைய மன்றங்களை உருவாக்குவோர் சிலர் இருப்பதாற்றான், 'நாடக மன்றம்' என்றவுடன் உண்மையான ரசிகர்களுக்கே 'அலுப்பு' ஏற்படுகின்றது

யு. தருமலிங்கம், அ.த.க. பாடசாலை நல்லூர்.

கே: அமைச்சர் சி. பி. டி. சில்வா மகாவலியை வடபகுதிக்குத் திருப்புவதற்கு ஏற்பாடு செய்வதாகக் கூறினாராமே, இது உண்மையா?

ப: ஆம்! அவர் கூறியது உண்மைதான்! ஆனல் எப்போது முயற்சி எடுப்பது என்பதைக் கூறுவதற்குள் அவருடைய வடபகுதிச் சுற்றுப் பிரயாணம்முடிந்துவிட்டதே!

கே: நடிகர்திலகம் சிவாஜி கணேஷனின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுவீர்களா?

ப: நடிக்காமல் இருக்கமுடியாத அந்தப் படிக்காதமேதையின் துடிப்பான வரலாற்றைக் "கலைச்செல்வி" யின் சினிமாப் பகுதியில் வெளியிடப் போவதாக ஆசிரியர் கூறுகின்ருர். பொறுத்திருந்துபடித்துப்பாருங்கள்.

வீ. எஸ். பாலு, மருதடி, நல்லூர்.

கே: உள்ளத்தில் என்றுமே மறக்கமுடியாத செயல் ஒருவன் தீமை செய்வதையா, நன்மை செய்வதையா?

ப: ஒவ்வொரு மனிதனுடைய உள்ளப்பாங்கைப்பொறுத்த விஷயம் இது. நாயைப்போல் நல்லவற்றை மட்டுமே நாளெல்லாம் நினைத்து நன்றி செலுத்துபவர்களுண்டு; ஆனையைப் போல் தீயதையே ஆயுள் முழுவதும் நினைத்துக் கொண்டு ஆத்திரப்படுபவர்களுமுண்டு.

எஸ் எஸ். சுந்தரம், ஏழாலை.

கே: கலையுடன் அரசியலைச் சேர்ப்பதன் அர்த்தம் என்ன?

ப: கலையுடன் அரசியலைச் சேர்க்காமலிருக்கச் சிலரால் முடியாததால் —கலைமூலம் அரசியற் பிரசாரம் செய்வது சுலபமாக இருப்பதால், இரண்டையும் கலந்து எல்லாவற்றையும்குட்டிச்சுவராக்குகின்ருர்கள்.

கா. தில்லைநாயகி, கல்வியங்காடு.

கே: நான் நேசறியில் சேர விரும்புகின்றேன் அதற்குரிய தகுதிகள் யாவை?

ப: தாங்கள் ஒரு சின்னப்பிள்ளையாக இருந்தால்போதும்,நேசறியில் சேர்ந்து கொள்ளலாம்! வேறு எதுவும் வேண்டியதில்லை!

ஆ. ஜயந்தன், அங்கிள் ரோட்.
மட்டக்களப்பு.

கே: ஏன் "கலைச்செல்வி"யில் கிறிக்கெற்றைப் பற்றி எழுதவில்லை?

ப: "கலைச்செல்வி" விளையாட்டுப் பத்திரிகை அல்லவே!

ஐ. ராஜன், திருநெல்வேலி.

கே: வறுக்காத வறை என்ன வறை?

ப: எவறை!

ஜி, பிரான்சிஸ்; எஸ்,,கனகசூரியம், றுவான்வெல்லை.

கே: ஒளவையார் ஒருபெண்ணாக இருந்தும், "தையல் சொற் கேளேல்" என்று கூறலாமா?

ப: அத் தையல் சொற் கேளேல்!

கே: தாலி பெண்களுக்கு வேலி; ஆண்களுக்கு...?

ப: ஆண்களுக்கும் அது வேலி தான்! ஒரே வேலி இருபாலாரையும் காக்கின்றது. வேலியை அடைத்து அதனுள்ளே— பாதுகாப்பாக இருப்பவர்கள் பெண்கள். அந்த வேலியைப் பாயும் உரிமையில்லாமல் வெளியே நிற்பவர்கள் ஆண்கள்!

உ. சுப்பிரமணியம், 64, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கே; இந்திய பாகிஸ்தான் எல்லைத் தகராறு இப்போது என்ன நிலையில் இருக்கின்றது?

ப: பிரச்னையை ஆயுதத்தினால் தீர்க்கமுடியாது அன்பினாலும் அஹிம்சையினாலும் நட்புறவாலுமே தீர்க்கலாம்என்றுசொல்லிச்சண்டை பிடித்தார்கள், இப்போதுதான் போரோய்வு ஏற்பட்டுள்ளது.

கே: பாரதப் பிரதமருக்கும் இலங்கைப் பிரதமருக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகள் என்ன?

ப: இலங்கையும் இந்தியாவும் நெருங்கியிருக்க வேண்டும் என இதய பூர்வமாக விரும்புபவர்கள் இருவரும். இருவருமே இடதுசாரிகளின் எதிரிகள்; அமைதியும் சமாதானமும் அகில உலகத்திலும் ஏற்படவேண்டும் என நினைப்பவர்கள். சாஸ்திரி, பார்த்தால் பசு; பாய்ந்தால் புலி. டட்லியும் புலிதான்—பாயத் தெரியாத புலி.

செல்வி ஜீனா ரஸாக், குருநாகல்.

கே: கல்லூரி மாணவிகள் சினிமாப் பார்ப்பதில் தவறுண்டோ?

ப: இப்போது ஓடுகின்றதே லவகுசா; அப்படியான படங்களைத் தப்பாமற் பார்க்கவேண்டும் பெரியோர்களுடன் சென்று! மற்றைய படங்களை, மாணவிகள் என்ன, மாணவர்களே பார்க்கக்கூடாதே!

கே: கருத்தில் ஒருத்தியை வைத்து, தாலியை வேறொருத்திக்குக் கட்டும் ஆடவரைப் பற்றித் தங்கள் கருத்து என்னவோ?

ப: கருத்தில் ஒருவனை வைத்து கழுத்தை இன்னொருவனிடம்நீட்டும் பெண்களை ஒத்தவர்கள்!

அ அமரேந்திரன், அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

கே: நடிகர் திலகம் நடித்த "இரத்ததிலகம்" இலங்கையில் தடைசெய்யப்படுமா?

ப: கூட்டரசரங்கம் தொடர்ந்து பதவியில் இருந்திருந்தால், இலங்கையின் கூட்டுச் சேராக் கொள்கையை "இரத்ததிலகம்" பாதிக்கும் எனக்கூறி அதைத் தடை செய்திருக்கும். கூட்டரசாங்கம்தான் தன் பதவியைக் கோட்டைவிட்டுவிட்டதே! "இரத்ததிலகம்" இங்கு வருவதில் தடையிருக்காது என்றே எதிர்பார்க்கின்றேன்.

அக்கரையூர் ஆதம்,
அக்கரைப்பற்று.

கே: ஏம்பா, உம் பதிலில் தமாஷும் தத்துவமும் புதைஞ்சிருக்கே?

ப: இப்படித்தான் வேறும் சிலர் என்உச்சியிலே'ஐஸ்' வைத்தார்கள். அதை நினைத்து நினைத்து நெஞ்சம் மகிழ்ந்து கொண்டிருந்த நேரத்தில் தம் கதைகளை அனுப்பி ஆசிரியரிடம் 'சிபார்சு' பண்ணும்படி கேட்டார்கள்! என் மகிழ்ச்சி முழுவதும் நெருப்பைக்கண்ட 'ஐஸ்' போல் நிமிடத்தில்கரைந்துவிட்டதே!

கொழும்பு-12

ஏம். வை. எம். மீஆது,

கே: படித்துப் பட்டமும் பெற்ற

பலர் மதுவெனும் பேய்க்கு அடிமையாகித் தீய வாழ்வு வாழ்வதேன்?

ப: அவர்களுடைய அடிப்படை நோக்கமே வேருக இருப்பதால், அவர்கள் பட்டத்திற்காகவும், பதவிக்காகவும் பணத்திற்காகவுமே படித்தவர்கள்; மதுபோதையில் இருப்பதைப்பெருமையாகக்கருதுபவர்கள். பண்புடன் வாழவேண்டும் என்பதற்காகப் படித்திருந்தால் மதுஅரக்கனை மிதித்தல்லவா கொன்றிருப்பார்கள்?

க. கயசிந்த், யாழ்ப்பாணம்,

கே: நான் சிறுவயதில் ஒரு பெண்ணை விரும்பினேன். அவளும் என்னை நன்ருக விரும்பினுள். இன்று அவளோ வேறு ஒருவனுல் காதலிக்கப்படுகிருள். அவளும் அவனைக் காதலிக்கின்ருள். ஆனுல் அவர்களுடைய காதலுக்குப் பெண்ணின் பெற்ருேர் எதிர்ப்பாக இருக்கின்ருர்கள். நான் அவளைக் காதலிக்கின்றேன். அவளும் என்னை விரும்புகின்ருள். காதலை நிறைவேற்றும்படியும் வேண்டுகின்ருள். நான் என்ன செய்வது? முன்பெல்லாம் என் காதலியாகவே இருந்தவள், இப்பொழுது என்னை அண்ணனுக நினைப்பதாகச் சொல்கின்ருள். என்ருலும் என்னுல் அவளை வெறுக்க முடியவில்லை. தயவுசெய்து நல்ல பதில் தரவும்?

ப: தங்களின் கேள்வியைத் தாங்களே மீண்டும் ஒரு தடவை படித்துப் பாருங்கள். அவள் தங்களை உண்மையிலேயே விரும்புகின்ருளா, இல்லையா என்பது தங்களுக்கே சரியாகத் தெரியவில்லை, தங்களுடைய மனக்குழப்பத்தையே தங்கள் கேள்வி தெளிவாகக் காட்டுகின்றது. வேருெருவனை அவள்

## திருக்குறள் கீர்த்தனை - 22.

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக் கொண்டற்று.

ராகம்: ஆனந்தபைரவி — தாளம்: ஆதி

**பல்லவி**

இறந்தோர் தொகையை எண்ணலாமா? - அதுபோல்
துறந்தோர் பெருமை சொல்லலாமா? பிறந்து

**அனுபல்லவி**

பிறந்திருந்தவர்களைப் பிழையின்றி எண்ணி
அறிந்திடல் முடியாதே ஆகையினுல் நாமும்

**சரணம்**

பிறந்து வளர்ந்துலகில் பீடிக்கும் பற்றுக்களைத்
துறந்து மனதில் இன்பம் நிறைந்தவர் பெருமையின்
திறந்தனைக் கூறுதல் இறந்தாரை எண்ணித்தொகை
அறிந்திடுதலைப் போல அமைந்திருத்தலால், இங்கு.

யாழ்ப்பாணம் ந. வீரமணி

விரும்புகின்ருள் என்பது உண்மை யாளுல், தாங்கள் தூர விலகுவதே சாலச் சிறந்தது.

ஐயன்ணு-முருகையா. மயிலணி.

கே: எம்.ஜி. ஆரின் பேட்டியை ஏன் "கலைச்செல்வி"யில் வெளியிட வில்லை?

ப: புரட்சி நடிகரின் மூவர்ணப் படத்தை அட்டையிலே தாங்கி இவ் வாண்டில் வெளியான தை-மாசி இதழில் அவருடைய பேட்டியும் இடம்பெற்றதே, தாங்கள் மறந்துவிட்டீர்களா? இலங்கைக்கு வருவதற்கு அதிகம் விரும்புவ தாகவும் அப்போது குறிப்பிட்டிருந் தாரே! "கலைச்செல்வி"யின் அடுத்த இதழில் இதுவரை வேறு எந்த இதழிலும் வெளிவராத புரட்சி நடிகரின் படங்களைக் காணலாம்!

கே: எம்.ஜி. ஆர். நடித்தவிஜ யாவின் "எங்கவீட்டுப் பிள்ளை" தமிழ் நாட்டில் வெற்றி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடியதுதானே?

ப: சாதாரண வெற்றி விழா அன்று. ஒரே தடவையில் ஆறு தியேட்டர்களில் வெள்ளி விழாக் கொண்டாடிய படம் "எங்கவீட்டுப் பிள்ளை". எம்.ஜி. ஆர். இரட்டை வேடத்தில் தோன்றிச் சக்கைப் போடு போட்டிருக்கின்ருராம், விஜயா கம்பைன்சின் இந்த முத லாவது வர்ணப்படத்தில்!

வே. செந்திநாயகம், கரவெட்டி.

கே: ஜனநாயகத்தில் நம்பிக்கை யுடைய தமிழரசுக்கட்சி, எப்போதும் ஜனநாயக ரீதியிலேதான் இயங்கு கின்றது என ஆனி "கலைச்செல்வி" யில் கூறியிருக்கிறீர்களே, அப்படியா யின் கடந்த ஸ்ரீமாவின் இடதுசாரி ஆட்சிக்கு ஏன் ஆதரவு கொடுத் தார்கள்?

ப: ஸ்ரீமாவின் ஆட்சி ஜனநாயக ரீதியில் சிலகாலம் செயற்பட்ட போது தமிழரசுக்கட்சி தன் ஆதர வைச் ஸ்ரீமாவுக்குக் கொடுத்தது. ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்து, அதன்மேல் ஒரு சர்வாதி கார மண்டபத்தைக் கட்டுவதற்கு ஸ்ரீமாவின் கட்சி என்று முயற்சி செய்ததோ அன்றே தமிழரசுக்கட்சி யும் தனது ஆதரவை நிறுத்திவிட் டதே!

த. சிற்சபேசலிங்கம், ஏழாலை.

கே: திருவிளையாடற்புராணத்தின் ஆசிரியர் யார்?

ப: பரஞ்சோதி முனிவர்.

தந்த. ஞானமுத்து, கைதடி தெற்கு

கே: கந்த முருகேசஞர் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப:ஆழ்ந்த தமிழறிவும் அதனுற் பிறந்த அடக்கமும் நிறைந்தவர். தமிழ் செய்வதைத் தன் தொழி லாகவும் தொண்டாகவும் கொண்டு வாழ்ந்தவர். இறுதிவரை தன் மானம் மிக்க தமிழனுக வாழ்ந்த அவருடைய மறைவு ஈடுசெய்ய முடி யாதது.

எஸ். கே. சபா, அ. மி. பாடசாலை, வல்வெட்டித்துறை.

கே: தமிழ்ப்பெண்மணிகள், கண் மணிபோன்ற தமது பண்பாட்டை மறந்துகொண்டு போகின்ருர்களே, இந்த இழிநிலை நீடித்தால்...?

ப: "தமிழினம்" என்ருேர் இனம் இருந்தது — என்றுதான் எழுதுவார்கள் எதிர்காலத்து வர லாற்ருசிரியர்கள்!ஏனெனில் ஓரினத் தின் பண்பாட்டையும் தனித் தன்மையையும் கட்டிக் காப்பவர்கள் பெண்களே! அந்தப் பெண்களே தம் கடமையை மறந்தால், அந்த இனம் 'மாஜி இன'மாகி விடும்!

கா. இளங்கோ, சங்கானை.

கே: வருங்காலத் தமிழ்ச் சரித் திரத்திரத்தில் வில்லன் பாத்திரம் யாருக்கு?

ப: எல்லா நாடகங்களிலும் வில் லன் இருக்கத்தான் வேண்டும் என்ற அவசியமில்லையே! அப்படி யொரு பாத்திரம் இல்லாமலே தமி ழர்களின் வாழ்வு உலக நாடக மேடையில் ஒழுங்காகவும் அமைதி

யாகவும் நடைபெறவேண்டும் என மனப்பூர்வமாக விரும்புகின்றேன். ஒவ்வொரு தமிழனும், என்னைப் போல் இப்படி இதயபூர்வமாக விரும்பினால், இங்கேயே சொர்க்கத்தைச சிருஷ்டிக்கலாமே!
எஸ். எஸ். தேவர், வதுளை.

கே: நான் காதலிக்கும் ஒரு பெண்ணே, "காதலிப்பது சந்தோஷத்திற்காகவும் பொழுதுபோக்கிற்காகவுமேதவிர, கல்யாணம் என்ற எலிக்கூண்டிற் கிடந்து தவிப்பதற்காகவல்ல" என்று என் 'கையெழுத்துப் புத்தகத்'தில் எழுதியிருக்கிருள். இதைப்பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: உங்கள் மனத்தைப் புண்படுத்தக் கூடாதே என்பதற்காக, பெண்களுக்கேயுரிய இரக்க சுபாவத்துடன் தன் உள்ளத்தை 'நாசூக்'காக வெளியிட்டுவிட்டாள் அவள். விஷயத்தை நன்கு விளங்கிக்கொண்டு இதயத்தை இன்றே திடப்படுத்திக்கொள்ளுங்கள்!
சி. சிவஞானம், சுன்னகம் மேற்கு.

கே: "கலைச்செல்வி" மூலம் நாடகக் கலையை வளர்க்கக்கூடாதா?

ப: "கலைச்செல்வி"யின் நோக்கங்களில் இதுவும் ஒன்றாக இருந்த போதிலும், இப்போதைக்குப் பிரமாதமாக எதையும் செய்ய முடியாதிருக்கின்றது. சிறந்த கலைஞர்களை அவ்வப்போது "கலைச்செல்வி" மூலம் அறிமுகப்படுத்துகின்றோம். சந்தர்ப்பம் கிடைக்கும்போது நாடக விமர்சனங்களையும் வெளியிடுகின்றோம். சென்ற ஆண்டில் ஈழத்தின் சிறந்த நடிகர் ஒருவரின் மூவர்ணப் படத்தை அட்டையில் வெளியிட்டுக் கௌரவித்தோமே, அப்படியான ஒரு பணியை வேறு எந்தப் பத்திரிகை செய்திருக்கின்றது?


# ஜெம்ரா டீசல்ஸ்

பதிவு இல: 4649

**336, பருத்தித்துறை வீதி : நல்லூர்**

டீசல், மோட்டார், படகு இயந்திரங்கள் உழவு மெசின்கள், கார், டீசல் லொறிகள், ஸ்கூற்றர், நீர் இறைக்கும் இயந்திரங்கள் திருத்துவதிலும், ஓட்டு வேலைகள், ஸ்பிறே பெயின்டிங், புரி வெட்டுதல் மட்டுப்படுத்துதல் ஆகியவற்றிலும் பிரசித்தி பெற்றவர்கள்.


இயந்திரப் பழுதினால் வழிகளில் தாமதிக்கும் இயந்திரங்கள் அந்த இடங்களில் பழுது பார்த்துக் கொடுக்கப்படும்.

Regd No: 4649

# GEMTA DIESELS

**336, PT. PEDRO ROAD : : NALLUR.**

# கவர்ச்சிப் பாவை



டி. ஆர். ராஜகுமாரிக்காக—பத்மினிக்காக—சாவித்திரிக்காக—சரோஜா தேவிக்காக—என்று இவர்களுக்காகவே படம் பார்க்கும் ரசிகர் கூட்டம் இருந்தது; இருநது வருகின்றது இந்த நட்சத்திரங்களின் பட்டியலுடன் கே. ஆர். விஜயாவின்பெயரையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்ற அளவுக்கு அவர் மிகவும் வேகமாக நடிப்புலகில் முன்னேறி வருகின்றார். கவர்ச்சிப்பாவைஎனரசிகர்களால் அழைக்கப்படும் விஜயா, நடித்த தாழம்பூ மிகவிரைவில் வெளிவரவிருக்கின்றது. இப்படத்தில் எம். ஜி. ஆர், அசோகன், நாகேஷ் முதலியோருடன் பிரமாதமாக நடித்துள்ளார் விஜயா.

கன்னித்தாய் என்ற புதுமைத் தலைப்புடைய படத்திலும் எம் ஜி. ஆர்' நாகேஷ், அசோகன் முதலியோருடன் இவர் நடித்து வருகின்றார். நமது சென்னை நிருபர் சமீபத்தில் விஜயாவின் வீட்டிற்குச் சென்றார். படப்பிடிப்பு இன்றி வீட்டில் 'ஹாய்'யாக அவர் ஓய்வெடுத்துக்கொண்டிருப்பதைத் தமது 'கமரா'வில் அடைத்து எமக்கு அனுப்பியுள்ளார்.

---

புதிய தொடர்கதை:

## நினைவுகள்
## மடிவதில்லை!

விரைவில் "கலைச்செல்வியில் ஆரம்பமாகின்றது.

# பேரும் பரிசும்-4

## சரியான விடைகள்

ஆனந்தவிகடன் - எஸ். எஸ். வாசன்
கலைக்கதிர் - ஜி. ஆர். தாமோதரன்
தீபம் - நா.பார்த்தசாரதி (மணிவண்ணன்)
பேசும்படம் - டி. வி. ராம்நாத்
குமுதம் - எஸ். ஏ .பி. அண்ணாமலை.

மேலேயுள்ளபடி பலர் விடைகளைச் சரியாகவும் தெளிவாகவும் எழுதியனுப்பியிருந்தனர். சரியான விடையனுப்பியோரின் பெயர்களை எழுதித் திருவுளச் சீட்டுமூலம் தெரிவுசெய்ததில் கீழ்க்கண்டோர் பரிசுக்குரியவர்களானார்கள்.

முதலாம் பரிசு : 10 ரூபா.
சி. ரதிலட்சுமி
13, அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு.

இரண்டாம் பரிசு : 5 ரூபா.
நா. கமலாதேவி
நாயன்மார்க்கட்டுச் சந்தி,
நாயன்மார்கட்டு.

மூன்றும் பரிசு : ''கலைச்செல்வி'' ஓராண்டுச் சந்தா.
அ. கனகசூரியர்,
"அருள்வாசா"
ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

## ஆறுதற் பரிசுகள்

1 க. யோகநாதன், 31/2 A, காரைக்காட்டு வீதி, வண்ணார்பண்ணை.
2 K. சிவனேந்திரன், தங்கமலர்பவனம், தம்பகாமம். பளை.
3 விஜயகுமாரி செல்லையா, 62, வன்னியார் வீதி, திருக்கோணமலை.
4 த. சிவதாசன். ''செல்வகிரி'' 105, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
5 சீ. சாரதா, கோட்டைக்காடு, சுன்னாகம்.
6 நா. சந்திராதேவி, மகேஸ்வரி வித்தியாசாலை, நாயன்மார்கட்டு.
7 கி. சாந்தகுமார், 40, வில்லூண்டிக் கந்தசாமிகோவில் வீதி, திருக்கோணமலை.
8 மா. பூபாலசிங்கம், அல்லாரை, கொடிகாமம்.
9 அ. தேன்மொழி, கல்வயல் முதலாம்கட்டை, சாவகச்சேரி.
10 அ. மோகனாம்பிகை, மகேஸ்வரி வித்தியாசாலை, நாயன்மார்கட்டு.
11 க. கிருஷ்ணபிள்ளை, மே/பா. வா. வைத்திலிங்கம், புலோப்பளை, பளை.
12 U. M. ஹஜ்ஜி முகம்மது, பாத்திமாக் கல்லூரி, கல்முனை.

# பேரும் பரிசும்-5

**1ம் பரிசு : 10 ரூபா**
**2ம் பரிசு : 5 ரூபா**
**3ம் பரிசு : "கலைச்செல்வி" ஓராண்டுச் சந்தா.**

ஆறுதற் பரிசுகள் : பன்னிரண்டு பேருக்கு "கலைச்செல்வி"யின் புரட்டாதி இதழ் அனுப்பிவைக்கப்படும்.

முடிவு திகதி : 20-8-65.

பிரபல ஐந்து சினிமாப் பாடல்களின் அடிகளைத் தருகின்றோம் அவற்றை ஆக்கியோர்களின் பெயர்களை நீங்கள் எழுதியனுப்பவேண்டும். உங்கள் விடைகளை மையினால் தெளிவாக அஞ்சலட்டையில் (Post card) எழுதி, உங்களின் பெயர், சரியான முகவரிகளைக் குறிப்பிட்டு 20-8-65க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பவேண்டும். பலர் சரியான விடைகளை அனுப்பியிருந்தால், பரிசுக்குரியோர் திருவுளச்சீட்டுமூலம் தெரிவுசெய்யப்படுவர்.

## பாடல்கள்

1. வெண்ணிலாவும் வானும் போலே 2. காலங்களில் அவள் வசந்தம்
3. தூங்காதே தம்பி தூங்காதே 4. உள்ளத்தின் கதவுகள் கண்களடா
5. எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதி நானென்றான்

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி:-

**கலைச்செல்வி**
புகையிரதநிலைய வீதி, : சுன்னாகம்.

# மாணவர்கள் தேவை

கல்லூரிகள், பாடசாலைகளில் "கலைச்செல்வி"யை விற்பனைசெய்வதற்கு மாணவ - விற்பனையாளர் தேவை. பிரதி ஒன்றுக்கு 5 சதம் கழிவு கொடுக்கப்படும். ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒவ்வொரு மாணவ விற்பனையாளரே நியமிக்கப்படுவர். ஆர்வமுடையோர், தங்களுடைய பெயர், வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டுமுகவரி ஆகியவற்றைத் தெளிவாக எழுதி, எத்தனை பிரதிகள் தேவை என்பதைக் குறிப்பிட்டு தலைமையாசிரியரின் கையெழுத்துடன் எமக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

தம் கல்வியைப் பாதிக்காதவகையில், சிறியளவில் மாணவர்கள் பணம் சம்பாதிப்பதற்கு இத்திட்டம் வழிவகுக்கும்.

நிர்வாக அதிபர்:

**கலைச்செல்வி**
**சுன்னாகம்**

பாருக்கு ஒளி கொடுப்பது சந்திரன்!
ஊருக்கு ஒளி கொடுப்பது மின்சாரம்!!
உங்களுக்கு வழி அமைப்போம் நாங்கள்!!
உங்களுக்குத் தேவையான
மின்சார உபகரணங்களை
இலகுவாகவும் மலிவாகவும் எங்களிடம் பெறலாம்
மின்சார ஒப்பந்தவேலைகள்
ஏற்றுக்கொள்ளப்படும்
"எலக்ரோ லக்ஸ்"
காங்கேசன்துறை வீதி : சுன்னாகம்.

உங்கள் அச்சுவேலைகளுக்கு
ஆசீர்வாதம் அச்சகம்
32, கண்டிவீதி., : யாழ்ப்பாணம்
தமிழ், சிங்களம், ஆங்கிலம், சமஸ்கிருதம்
ஆகிய நான்கு மொழிகளிலும்
அச்சிடக்கூடிய ஒரே இடம்!
FOR YOUR PRINTING REQUIREMENTS
ASIRVATHAM PRESS
32, Kandy Road,
JAFFNA.


3 - 7/88

Dial: 585 Cables: **MANSOORA**

அழகுக்கு அழகுசெய்யும்

# தங்க வைர, நகைகளுக்கு,

விஜயம் செய்யுங்கள்



அணிவோரை

மகிழ்விக்கும்

அற்புத


டிசைன்களின்

உற்பத்தியாளர்கள்:

# கே. என். எம் மீரான் சாஹிப்

## 'தங்கப்பவுண் நகை மாளிகை"

**கன்னாதிட்டி : யாழ்ப்பாணம்**



# PARASCO

## Lubrication Service

# பரஸ்கோ

## மசகிடுப் சேவை

| | |
|---|---|
| இன்கோ | INCO |
| ஷெல் | SHELL |
| கல்டெக்ஸ் | CALTEX |
| எஸ்ஸோ | ESSO |
| டக்கம்ஸ் | DUCKHAMS |
| கஸ்ரூல் | CASTROL |

## ஓயில் வகைகள்

உவர்ப்பற்ற நீரினல் சுத்தம் செய்து வாகனங்கள் துருப்பிடியாது நீண்ட நாட்கள் பாவிப்பதற்குச் சிறந்த முறையில் மசகிடுசேவை செய்வதிலும் எல்லாவிதமான தயாரிப்பு ரக எண்ணெய் விநியோகிப்பதிலும்நன் மதிப்பைப்பெற்றவர்கள்

# பரஸ்கோ

## லுபிறிக்கேஷன் சேர்விஸ்

பருத்தித்துறை வீதி
நல்லூர்

முத்திரைச்சந்தை
யாழ்ப்பாணம்.